பதிவு என் 2041 மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா ஒன்று



வருட சந்தா முன் பணம் ...	ரூ 3—0
6 மாத சந்தா ,, ...	ரூ 1-12
வெளி நாட்டிற்கு ,, ...	ரூ 4—0

[வாரப்பதிப்பு]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
☞ தனி விகிதமும் உண்டு.

மாலை 3 | ஈரோடு, பிரபவ-ளூ ஆனிமீ 19 உ (3—7—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 10

மின் சார ரசம்.

☞ மின்சாரரசம்.

ஒன்றே எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றதென உலகப்பிரசித்தி பெற்றுள்ளது. எந்த வியாதிக்கும் துளிக்கணக்கில் உபயோகித்து நிமிஷக்கணக்கில் குணம் பெறலாம். பத்தியமில்லை. அனுபானமில்லை. பால்யர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும், எக்காலத்திலும் பயமின்றி இதை உபயோகிக்கலாம். பாஷாண சம்மந்தமான சரக்குகள் இதில் இல்லை.

புட்டி 1-க்கு ரூ. 2.
தபாற் சார்ஜ் வேறு.



☞ மின்சாரரசம்.

ஒரு புட்டி கையிலிருந்து விட்டால் வேறு டாக்டர்களை தேட வேண்டிய அவசியமே இராது. மனிதர்களுக்கு வரும் ஆபத்தை யார் அறிவர்? எந்தசமயம் எப்படி இருக்குமோ? ஒருவேளை ஒரு துளி மின்சாரரசமே ஒருவரை மரண அபாயத்திலிருந்து விடுவித்து விடலாம். அப்படி அநேகர் உயிர் தப்பியுமிருக்கின்றனர். ஆகவே நோயாளிகளுக்கு இது ஓர் உயிர்த் தோழன். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையா ஆபத்து நேசன். இன்றைக்கே எழுதுங்கள்.

கைகண்ட மருந்து. கேட்லாக் இனாம்.

விலாசம்:— **மின்சாரரசம் கம்பெனி லிமிடெட், சேலம். (S. I.)** தந்திவிலாசம்:—"Rasamco"

மதுரையில் இதன் முக்கிய வியாபாரிகள்:- *T. N.* சோக்கலிங்கம் பிள்ளை & சன்ஸ் இங்கிலீஷ் மருந்து ஷாப் வியாபாரம், வடக்கு சித்திரை வீதி, மதுரை.

மலாய் நாடுகளுக்கு சோல் ஏஜண்டுகள்:— ஆர். இ. முகம்மது காசீம் & கம்பெனி, கிள்ளாங், பினாங், சிங்கப்பூர்.

சேலம்

சுத்த கதர் ஜவுளிகள்.

கல்யாண காலங்களுக்காக ஸ்பெஷலாய்

பட்டு ஜரிகைபேட்டுகளினால் தயார்செய்த கதர்

நமது சொந்த தரிகளால் தயார் செய்யப்பட்ட கைல் நூலினால் பலவிதமான ஜரிகை பேட்டுகளில் தயார்செய்த 54" 4½ 5, 6, 7, 8, 9, 10 முழம் வேஷ்டி நகங்களும் 45×5 ஜரிகைப்பேட் மேல் அங்கவஸ்திரங்களும் சேலம் பட்டு குண்டஞ்சு, கரையில் 7, 8, 9 முழம் வேஷ்டிகளும் பலவிதமான கலர்களில் தயார்செய்த 45×9 கெஜம் சில நகங்களும் ஜமக்காளங்களும் கைவசமிருக்கின்றன. விலை ஜாப்தாவுக்கு எழுதவும். அத்தாக்ஷி பத்திரம்.

☞ ஸ்ரீமான் C. V. ஜெயகோபாலசெட்டியார் கைநூலால் கைதரியால் தயார் செய்யப்பட்ட சுத்த தர் கதுணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார். (Sd) S. Ramanathan, காரியதரிசி கதர் இலாக்கா.

C. V. ஜெய கோபால செட்டியார்,

கதர் வியாபாரம், சேலம்

நாலு தலைமுறை பாரம்பரை பமஸ்தான வைத்திய நிபுணர்! பழனி சித்த வைத்தியசங்க அமைச்சர்!! தமிழ் சித்தவைத்திய கான்பரன்ஸ்களில் முதல்தரதேவ ஔஷதங்களென முதல்தர தங்கமெட்டல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்!!! முப்பு சேர்ந்தமருந்துகள்.

பழனி. சி. எம். சாமி

மகாவீரிய தங்கபஸ்பம்

பச்சிலை மூலிகையினாலேயே நீற்றப்பட்டது. பெரிய மஹான்களின் முறை அபாரதாது புஷ்டியும், பலமும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும் இல்வாழ்வில் அதியற்புத சுகம் தரும். வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, நீரழிவு பவுத்திரம், மூலம் க்ஷயம், இருமல் கபக்கட்டு குன்மம் முதலிய சகல வியாதிகளும் தீரும் 48 நாள் பஸ்பம் விலை ரூ. 20. 24 நாளைக்கு ரூ. 10.

நற்சாட்சி:—தங்கள் தங்கபஸ்பம் சாப்பிட்டதில் எனக்கிருந்த வாய்வு, வெட்டை பலக்குறைவு முதலியன நீங்கி அபார தாது புஷ்டி உண்டாயிருக்கிறது. இதன் பெருமையையெழுதமுடியாது இன்னும் மேற்படி தங்கபஸ்பம் ஒரு மண்டலத்திற்கு அனுப்பவும். வி. எம். வரதராஜப் பெருமாள்சாமி கவிராயர் பொள்ளாச்சி.

குருஅப்ரேக் செந்தூரம்-நீரழிவுக்கு.

ஜாஸ்தி போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேகவெளுப்பை மாற்றி ரத்தவிர்த்தியையும், தேக புஷ்டியையும், தரும் சகல மேகமும் க்ஷய ரோகமும் தீரும். தணுக்கற்றது 24 நாள் புட்டி 1-க்கு ரூ, 15 48 நாள் புட்டி 1-க்கு ரூ. 30.

நற்சாட்சி:—நான் சிங்கப்பூரில் நீரழிவினால் அதிக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது தங்களுடைய குருஅப்ரேக் செந்தூரத்தை அனுபானத்துடன் சாப்பிட்டதில் என் வியாதி பூராவும் சொஸ்தமாயிற்று இது நீரழிவு வியாதிக்கு மிக உயர்ந்த மருந்தாய்தெரிகிறது. எனது சினேகிதர் ஒருவருக்கு ஒரு புட்டி குருஅப்ரேக் செந்தூரமும் அனுபானமும் வி. பி. யில் அனுப்பவேணுகிறேன். கா. முகம்மது அப்துல்காதர் காரைக்கால். 21—12—26.

குருதாளகபஸ்பம்-இருமலுக்கு

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு, இவைகள் எவ்வளவு காலப்பட்டதாயிருந்தாலும் சரி, 9-வித காசமும் அவசியம் தீரும். 48 நாள் பஸ்பம் ரூ. 32. 2 4 நாளைக்கு ரூபா16.

நற்சாட்சி:—தங்கள் குருதாளகபஸ்பம் ஒரு மண்டலம் சாப்பிட்டதில் இருமல், ரத்த வாந்தி இளைப்பு இவைகள்குணமாயிருக்கிறது ஆர். கந்தையா நேட்டிவ் டாக்டர், பாயிண்டு பீட்ரோ சிலோன் 18—9—25.

எல்லா மருந்துகளுக்கும் வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்

சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்,

C. மலையப்பசாமி.

நித்தியானந்த வைத்தியசாலை பழனி, S I.

சென்னைபிராஞ்சு ஆபீஸ்:—முருகன் ஏஜன்ஸி 43 அரமனைக்காரத் தெரு ஜி.டி. சென்னை

சந்தா நேயர்களுக்கோர் அறிவிப்பு

நாம் இதுவரை வெளியூர்களில் சந்தா பணம் வசூலிக்கவாவது, விளம்பரப்பணம் வசூலிக்கவாவது ஒரு ஏஜண்டுக்காவது அதிகாரம் கொடுக்கவில்லை. இப்படி இருக்க "குடி அரசி"ன் பெயரைச் சொல்லி சந்தா சேர்ப்பதாக நேயர்களிடமிருந்து பணம் வசூலித்து விடுகிறார்களென்று கேள்விப்படுகிறோம். ஆகையால் நேயர்கள் யாரிடமாவது பணத்தைக் கொடுத்து விட்டு எமது காரியாலயத்திலிருந்து பத்திரிகையை எதிர்பார்க்க முடியாது. ஆகையால் இவ்வித அசம்பாவிதங்களுக்கு நேயர்கள் ஏமாந்து போகாமல், சந்தாதொகை முதலானதுகளை நேரிலேயே அனுப்பி விடுமாறு வேண்டுகிறோம்.

மானேஜர்

"குடி அரசு", ஈரோடு.

நமது அச்சுக்கூடத்தில்

பலதிறப்பட்ட ஜாப் வேலைகள் அழகாகக் குறித்த காலத்தில் செய்துதரப்படும்

மானேஜர்:—

உண்மை விளக்கம் பிரஸ், ஈரோடு.

Photo Hand Camera



லண்டனில் புதிதாய்ச் செய்யப்பட்டது. எவரும் எளிதில் போடோ பிடிக்கலாம். போடோவின் அளவு 3½"x 2½" ஆகும், இந்த மெஷினை வைத்துக்கொண்டு மாதம் ரூ. 30 முதல் 200 வரை சம்பாதிக்கலாம்: எல்லா சாமான்களுடனும் விவரங்களுடனும் குறைந்த விலை ரூ. 4—12—0.

Sole Agents

ஸ்ரீதானம் அண்டு கம்பெனி,

பிரும்ம சமாஜம், ஜி. டி. மதராஸ்

சேலம் மாம்பழம்.

தினசரி தில்வாரத்திற்கு முதல்தரமாக பொறுக்கி எடுத்தனுப்புகிறேன். முதல்தரம் குறிப்பிட்ட ஸ்டேஷனுக்கு பாக்கிங் அண்டு ரெயில்சார்ஜ் சேர்ந்து 100 க்கு ரூ. 7. 2-ம் தரம் 100 க்கு ரூ. 5. ஒட்டுமாங்கன்று சீமை காய்கறி புஷ்பவிதைகளுடைய 1927 ஷ்வருஷத்திய கேட்லாக் இனாம்.

ச. கோ. இ. காதர்மீரா சாயபு,

ஹெட் நர்சரிதோட்டம் சேலம்.

"அதிவேகு. ஆச்சரியம்" என்னும் ஆரூடம்,

கைகண்ட பலன்! தகுந்த விடைகள். தகுந்த விடைகள்! எதிர் கால பலன் கேள்விகள் 6-க்கு ரூபாய் ஒன்று மேற் கொண்டு கேள்வி 1-க்கு அணா நான்கு தபால் செலவு! வேறு இன்னும் வேறுவிஷயங்களுக்கும் நமக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும். அன்னிய நாட்டு வாசிகள் முன் பணம் தபால் செலவுடன் சேர்த்து அனுப்ப வேண்டும்.

வி. எஸ். அய்யர்

சுப்ரமணிய உபாசி

பழனி P. O. (S. I.)

"பணம் வாங்கின மனங்கூட டி. சீனிவாசய்யங்காரை மன்னிக்கவில்லை."

அவியல் 6ம் பாகம்

(கைவல்யசாமியார் எழுதுவது)

வசந்தன்:— வீட்டிற்கு வந்த சந்திரன் வசந்தனைப் பார்த்து, "என்னைக்கண்டு சில காலமாயின. நாம் பேசின விஷயம் முடிவடையவில்லை, இப்போது நான் படிக்கும் பேப்பரெல்லாம் பம்பாயில் கூடின காங்கிரஸ் கமிட்டியின் பேச்சாகவே இருக்கிறது. இன்று அதைப்பற்றி உன்னிடம் பேசவேண்டும். ஆனால் சுயராஜ்யக் கக்ஷிக்காரர்களின் பேரில் உனக்கு நம்பிக்கையில்லை என்பது எனக்குத் தெரியும். என்றாலும், அதைப்பற்றியே இன்று உன்னிடம் பேசப்போகிறேன். நீ உன் மனதை நடுநிலைமைப்படுத்தி இப்பொழுது நடந்துவரும் விவகாரங்களில் உன் மனம் எப்படியிருக்கிறது என்பதைச் சொல்லு:

சந்திரன்:— வசந்தா! இந்த விஷயங்களைப்பற்றி விவரிக்க அநேகர்களிருக்கிறார்கள். தமிழ்நாடு இதைப்பற்றி உள்ளது உள்ளபடியே எழுதுகிறது. என்னிடம் நீ கேட்டமையால் என் அபிப்பிராயமும் சொல்லுகிறேன். பம்பாயில் கூடின காங்கிரஸ் கமிட்டியில் சென்னை சுயராஜ்யக் கக்ஷிக்காரர்கள் நடந்துகொண்ட விதங்களும், அதிலுள்ள தர்க்கங்களும், கேள்வி, சமாதானங்களும், மீட்டிங்குகளும், காங்கிரஸ் தலைவரின் மோசடியும், இப்பொழுது பலருக்கும் பத்திரிகைகளுக்கும் வேலையாகவிருக்கிறது. எங்கள் குடியரசு எந்த விதமான ஆச்சரியமும் கொள்ளவில்லை. ஏனெனில், எலக்ஷனுக்கு முன்னும் சுயராஜ்யக் கட்சி செய்யும் மோசம், செய்யப்போகிற ஏமாற்று, செய்த பின் சொல்லும் அயோக்கியத்தனமான பதில், இதனாலெல்லாம் பிராமணரல்லாதவர்கட்கு உண்டாகும் கெடுதல், முதலியவைகளை விபரமாக அநேக தடவை சாதாரண வார்த்தைகளாலும் கண்டிப்பான மொழிகளாலும் பொது ஜனங்களுக்குத் தெரியப்படுத்திருக்கிறது உனக்குப் படித்த ஞாபகமிருக்கும். நீயும் இன்னுஞ் சிலரும் பார்ப்பானையே குடியரசு குற்றம் சொல்லுகிறது என்கிறீர்களே ஒழிய, ஏன் குற்றம் சொல்லுகிறது? எதற்காக சொல்லுகிறது? எப்படி நடந்துகொண்டால் சொல்லுகிறது? எங்கே குற்றங் கண்டுபிடித்துச் சொல்லுகிறது? எவனை அயோக்கியனென்கிறது? என்பதை நீயும் உன் கூட்டாளிகளும் ஆலோசித்து நியாயங்களைப் பகுத்துப் பார்த்து சரி தப்பைக் கண்டுபிடித்து அதன்படி நடக்க முயற்சிப்பதில்லை. "எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினு மப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்றார் வள்ளுவர். அறிவில்லை என்று ஒத்துக்கொள்ளுகிறவர்கள் ஒருவருமில்லை. அறிவென்பது புத்தி விவேகத்தின் உதவியால் கண்டுபிடித்த உண்மையை நிச்சயப்படுத்துவதற்கு அறிவென்று பெயர். இந்த அறிவில்லாதவன்கூட தன்னபிமானத்தால் தன் குற்றத்தை ஒத்துக்கொள்ளுவதில்லை. புத்திசாலியாகவிருப்பவன் தன் காரியநிமித்தம் ஞாயத்தை மறைத்து அநேக கதைகள் பேசுகிறான். கோழையும் பயத்தால்தான் படித்தபடிப்பெல்லாம் ஞாயத்திலேயே செலவு செய்கிறான். கைக்கூலியும் பரிசுக்கடிதமும் பெறுகிறவன், ஞாயத்தைக் கண்டுபிடிக்கவேண்டுமென்கிற கவலை அவனுக்குத் தேவையில்லை. அவன் எதற்காக அடிமைப்பட்டானோ அதை அவன் செய்கிறான். அதில் சேர்ந்தவனல்லவே நீ! உன் கூட்டாளிகளில் சிலர் எவ்வளவு சிறப்பத்திலிருந்தாலும் இப்போதைய ஜீவிதகாலத்தை இரட்சித்துக் கொள்ளுகிறதிலேயே இச்சையுள்ள அற்பப் பிறவிகளா? அவர்கள் விஸ்வாசமற்ற நம்பிக்கையற்றவர்களைப்போலத் தங்களை இரட்சித்துக்கொள்ளுவதற்கு ஆதாரமாக இழிந்த சூத்திரம் வஞ்சகம், கபடம், இவைகளைக் கையாளும் பரம்பரையான உன்னுடைய நியமன முக்கியஸ்தர் பார்த்து ஒன்றுபவர்களல்லவா நீயும் உன் கூட்டமும்? அப்படியில்லாதிருந்தும் பிராமணரல்லாதார் கட்டுக்குள் ஏன் பகிரங்கமாகச் சேர்ந்து அதற்கு உதவிபுரியப்படாது?

வசந்தன்:— சந்திரா! பிராமணரல்லாதாரிடம் எனக்கொன்றும் அபிமானமில்லாமலில்லை. ஜஸ்டிஸ் கட்சி உத்தியோகத்திற்கே ஆசைப்பட்டு சர்க்காருடன் சேர்ந்து கொள்ளுகிறார்கள். அதனால் தேசத்திற்கு நன்மையில்லை. ஜஸ்டிஸ் கட்சித் அரசியல் தொண்டுமல்ல. இதுவரையிலும் பிராமணரல்லாதாருக்கு என்ன நன்மை செய்துவிட்டது? காங்கிரசையும் தூஷிக்கிறது.

சந்திரன்:— வசந்தா, பார்ப்பனார் இந்தக் குற்றத்தைச் சொல்லுவதாயிருந்தால் எனக்குக் கவலையில்லை. ஆனால் நீங்களுஞ் சேர்ந்து சொல்லுவதுதான் சரியில்லை. எப்படி எனில், பார்ப்பனர்களே எல்லா உத்தியோகத்திலுமிருக்கிறார்கள். மற்ற ஜாதிக்காரர்களுக்கும் உத்தியோகம் வேண்டுமென்பது அந்தக் கட்சியின் கொள்கைதான். பார்ப்பனருடைய மோசடியின் மத்தியில் சேராக அதிகாரி வர்க்கத்தைக் கட்டிக்கொள்ளாமல், உத்தியோகமடைவது எப்படி? அதனால் அக்காலத்து கௌன்சில் மெம்பர்களான தியாகராயர், நாயர், இவர்களிடம் சிபார்சுகளை எடுத்துச் சொன்னார்கள். ஒரே கூட்டத்தார் உத்தியோகத்தையடைவது ஞாயமில்லை, என்பதை அவர்களுணர்ந்து உத்தியோகத்தைப் பகுத்துக்கொடுப்பதற்கு உதவி புரிந்தார்கள். இப்பொழுது லா மெம்பரான சர். சி. பி. ராமசாமிய்யர் போலீஸிலும் சிவில் டிபார்ட்மெண்டிலும் பார்ப்பனருக்கே உத்தியோகம் கொடுத்துக்கொண்டு வருகிறாரே! உங்கள் மனிதன் கௌன்சிலிருந்தால் உங்களுக்காகப் பரிந்து பேசுவார் என்பது சரியல்லவா! அதற்காக கவர்மெண்டை வற்புறுத்தவேண்டாமா? தன் காரியத்தைக் கவர்மெண்டுக்கு எடுத்துச் சொல்லுவதாலேயே கவர்மெண்டார் பக்கமே சேர்ந்துவிட்டாரென்று சொல்லுவது பார்ப்பானுக்குத் தன் லாபத்தை மற்றவர் அனுபவித்துவிடுவார்கள் என்கிறதைத் தவிர வேறு ஏதாவதுண்டா? பெரிய உத்தியோகத்திலிருக்கும் எந்தப் பார்ப்பான் சர்க்காரைத் தாங்கிப் பேசாதவன்? முன் புதிதாக இரண்டு கோர்ட்டு ஜட்ஜிகள் நியமிப்பதற்கு உத்தேசித்ததைப் பிராமணரல்லாதவர்களுக்குப் போய்விடுமே என்று நினைத்து அதை எந்தப் பெரிய பார்ப்பான் தடுக்காமலிருந்தான்? தியாகராஜ செட்டியாரின் சண்டையில் அல்லவா பிராமணரல்லாதவர்கட்கு ஹைக்கோர்ட்டு ஜட்ஜி வேலையானது? இப்பொழுது கொடுக்கப்பட்ட ஹைக்கோர்ட்டு ஜட்ஜிகள் எல்லாம் பிராமணர்களுக்குத்தானே கொடுக்கப்பட்டது! உங்களுக்குப் பரிந்து பேசுகிறவர்கள் யாரிருந்தார்கள்! உங்களுக்கு பரிந்தே சுயக்கட்சியை பார்ப்பாருடன் சேர்ந்து பலவீனப்படுத்தி விட்டீர்களல்லவா திக்கற்றவர்கள் போலிருக்கிறார்கள்? உத்தியோக வேட்டைக் கட்சி ஒடுபட்டுப்போயிற்று என்று சொல்லுகிறீர்களே! இப்பொழுதிருக்கிற உத்தியோகங்களெல்லாம் எங்கே போயிற்று? யார் அனுபவிக்கிறார்கள்? காலியாகவே கிடக்கிறதா? நீ சொல்லும் காங்கிரஸ் கட்சி உத்தியோகத்திற்கே போவதில்லையா? இப்பொழுது உத்தியோகத்தையடைந்தவர்களெல்லாம் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள்? யாரால் அடைகிறார்கள்; வெள்ளைக்காரர்களைப்போன்று இந்தியர்களுக்கும் உத்தியோகம் கொடுக்கவேண்டும் என்று கேட்பது காங்கிரஸின் முதல் கொள்கையல்லவா? மகாத்மா காந்தி மத்தியில் காங்கிரஸிலிருந்து உத்தியோகத்தைவிட்டுவிட வேண்டுமென்று சொன்னது ஒன்றே ஒழிய முன்னும் பின்னும் இப்பொழுதும் உத்தியோகத்தை விரும்பாதவர்கள் உண்டா? திருவாளர்கள், சர். சுப்பிரமணியய்யர், வி. கிருஷ்ணசாமி அய்யர், சுந்தரமய்யர், சி. பி. ராமசாமி அய்யர் இவர்கள் காங்கிரஸிலிருந்து உத்தியோகமடைந்தார்கள். எத்தனை பார்ப்பனர்கள் வேலையைக் கைதூக்கிவிட்டார்கள். எத்தனை பார்ப்பன முன்சீப்புகள் சப் ஜட்ஜிகள் டிப்டி கலெக்டர்கள் இன்னும் நாம் கண்டுபிடிக்கமுடியாத உத்தியோகஸ்தர்கள் எத்தனை! இத்தனையும் அனுபவிக்க எத்தனை வெள்ளைக்காரர்களுக்கு விருந்து செய்தார்கள். இப்போதிருக்கும் காங்கிரஸ்காரர்கள் வெள்ளைக்காரர் பங்களாவுக்கு ராத்திரியில் போகிறார்கள். முன் சொன்னவர்கள் ராத்திரியும் பகலும் போனார்கள். ஜஸ்டிஸ் கட்சி வெளிப்படையாக நேராகவே சட்டசபையில் போய் உட்கார்ந்துகொண்டு கேட்கிறது. இதுதான் வித்தியாசம். ஒரு வார்த்தை அடுக்கல்ல. நீயே சத்தியமாக நினைத்துப்பார் உனக்குத் தெரியும், நமவர்களுக்கு ராத்திரியில் வெள்ளைக்காரர் பங்களாவுக்குப் போய் கேட்பது அவமானமாக இருப்பதால் அவர்கள் அப்படி செய்வதில்லை. நான் சொல்வது இத்தனையும் நடப்பது, பிரத்தியட்சமல்லவா! இந்த அக்கிரமத்தைக் கண்டுதான் திரு நாயரும், திரு செட்டியாரும், உத்தியோகத்தை எல்லாருக்கும் பங்குபோட்டுக் கொடுக்க வேண்டுமென்று வெளிப்படையாகக் கேட்கவந்தார்கள். அவர்கள் எடுத்துச்சொன்னதால்தான் சிறிதாவது பார்ப்பனரல்லாதார்க்கு நன்மை உண்டாயிற்று. ஜஸ்டிஸ் கட்சி கவர்னரை நேரில் கண்டுபேசும்படியான மனிதர்களையும் வழக்கங்களையும் பிராமணரல்லாதார் கூட்டத்திலிருந்து உண்டாக்கிற்று. முன் ஜெமீன்தார்கள் கவர்னரைப் பார்ப்பதாகவிருந்தால் பக்கத்தில் பார்ப்பானே இருக்கவேண்டும். இப்பொழுது அப்படியில்லை. எத்தனை ஜெமீன் எத்தனை வக்கீல் எத்தனை தனிமனிதர்கள் பெரிய உத்தியோகஸ்தர்களை நேரில் போய்ப்பார்க்கிறார்கள், இதற்கு வழிவெட்டிவிட்டது யார்? இதை ஒத்துக்கொள்ளாத பிராமணரல்லாதவர்களுமுண்டு. செட்டிகள் முதலிகள் என்கிறவர்களை ஏகவசனத்தைச் சொல்லிச், "சூத்திரன் கிடக்கிறான். முட்டாள்" என்று அலட்சியப் படுத்திக்கொண்டிருந்த பார்ப்பனர்கள் இப்பொழுது மூலைமுடக்கில் கிடந்தவர்களை "வாருங்கள், முதலியார் அவர்களே! வாருங்கள்! செட்டியார் அவர்களே எப்பொழுது வந்தீர்கள்! என்றும் தண்ணீர் கொடுத்தால் பாவம் வந்துவிடுமென்றும் நினைத்துக்கொண்டிருந்தப் பார்ப்பான் காப்பி சாப்பிடுகிறீர்களா! இங்கேயே சாப்பிட்டு விடுங்களேன்! என்றும் என் மோட்டார்காரையே அனுப்புகிறேன். தங்களுக்குப் பணத்திற்கு ஏதாவது அவசரமுண்டா! உங்கள் பேச்சுதான் நான் இன்று கேட்கவேண்டும்" என்றும் கேழ்க்கிறார்களே! இவ்விதமாகப் பார்ப்பான் இதற்கு முன் எந்தக்காலத்தில் நம்மைத் தாங்கினான். இதை எவ்

[இதன் தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க]

பகுத்தறிவின் லக்ஷணம்.

மகாத்மா புத்தரினது வாக்கியம்

1. "ஒரு விஷயத்தை நல்லதென்றாவது கெட்டதென்றாவது கேள்வி மாத்திரத்திலே நம்பி விடாதே"
2. உண்மையாக நடந்திருக்கா விட்டால் எழுதி வைத்திருப்பார்களா என்கிற காரணத்தினாலேயே ஒன்றை உண்மையானது என்று நம்பி விடாதே"
3. "அநேக இடங்களில் வழங்கப்பட்டு பாரம்பரியமாக நடந்து வருகிற ஐதிகம் என்கிற காரணத்திற்காக ஒன்றை நம்பிவிடாதே"
4. "அநேகர் நம்பி அதன்படி நடக்கிறார்களே என்கிற காரணத்திற்காக உண்மை என்று நம்பி விடாதே"
5. "ஒரு மகாத்மாவால் வரையப்பட்ட கதை என்று காட்டப்பட்டதினாலேயே நம்பி விடாதே"
6. "நமக்கு ஒன்று ஆச்சரியமாய் தோன்றப்படுவதினாலேயே இது தேவனாலோ அல்லது அற்புதமான ஒருவனாலோ ஆக்கப்பட்டிருக்கவேண்டும் என்று கற்பனை செய்து கொண்டு நம்பி விடாதே"
7. "பெரியோர்களாலும் குருமார்களாலும் சொல்லப்பட்டது என்கிற காரணத்தினாலேயே நம்பி விடாதே"

"ஒவ்வொரு விஷயங்களையும் நடுநிலைமையிலிருந்து ஆராய்ச்சி செய்து சகலருக்கும் நன்மைதரத்தக்கதாயிருந்தால் அப்பொழுது அதை ஒத்துக்கொள்" "ஒத்துக்கொண்டபடியே நட."

அ. ஆ. இ, ஈ.

காலஞ்சென்ற கோகலேயானவர் பார்ப்பனர்களில் மிக உத்தமராவர். மகாத்மா காந்தி

பார்ப்பனரல்லாதார்க்கு ஓர் நற்செய்தி.

அன்பர்களே!

நம்மை இதுகாறும் பரியப்பார்ப்பனர் ஏமாற்றிக் கொண்டே வந்திருக்கிறார்கள். இப்புரட்சிக் காலத்திலும் கூட பார்ப்பனரல்லாதாராகிய நீங்கள் கண் விழித்துக் கொள்ள வேண்டாமா?

ஹிந்து மதமெனச் சொல்லும் (நம்) மதத்தில் ஏராளமான வேற்றுமைகள் அவர்களால் உண்டாக்கப்பட்டிருக்கிறது. அவையெல்லாம் எதற்காக? சொந்த லாபங்கருதியேயாகும். எல்லோரும் நன்குபடித்து பார்ப்பனர்களின் சூட்சிகளை அறியவேண்டியது மிகமுக்கியம். ஆதலால், அது பற்றி மகாமேதாவியும், சைவ மத சமாலோசனை சங்க மாணாக்கருமான சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்கள் ஞான சூரியன் என மகுடமிட்டு 156 பக்கங்கள் கொண்ட ஓர் நூல் எழுதியுள்ளார்கள். அந்நூலை திருவாளர் வயிசு ஷண்முகம் செட்டியாரவர்கள் அச்சுக்குக்கொடுத்து அச்சு வேலையும் பெரும்பாலும் முடிந்து விட்டது. ஜூலை மாதம் 15ந் தேதிக்குள் புத்தகம் வெளிவந்து விடும். ஏழை முதல் பணக்காரர் ஈறாக எல்லோரும் அப்புத்தகத்தைப் படித்து உணரவேண்டுமென்கின்ற பேரவா உடைய நமது வயிசு ஷண்முகம் செட்டியாரவர்கள் அதன் விலையை மிக மலிவாக நிர்ணயிப்பார்களென்பது தோற்றம். புத்தகம் வெளியானவுடன் "குடி அரசு" "ஊழியன்" "குமரன்" "திராவிடன்" முதலிய பத்திரிகைகள் மூலம் தெரிவிக்கப் பெறும்.

சொற்ப பிரதிகளே இப்போது அச்சிடப்படுகிறது. ஆதலால் முன்னால் பதிவு செய்து கொள்பவர்கட்கு புத்தகங்கள் கொடுத்த பிறகு தான் ஏனையோருக்குக் கொடுக்கப்படும். அதுவும் மீதப் புத்தகங்களிருந்தால் தான். பதிவு செய்து கொள்ளத்தவறியவர்கள் ஒருக்கால் இரண்டாவது பதிப்பு வரை காத்திருக்கவும் நேர்ந்து விடும். ஆதலால் புத்தகம் வாங்க விரும்புவோர்கள் முன்னால் பதிவு செய்து கொள்வது தான் நலம்.

பதிவு செய்வதும் அடியிற் காண்கிற விலாசதாருக்கே எழுதி பதிவு செய்து கொள்ளலாம்.

ஒரு பிரதியின் விலை ரூ. 1—4—0 க்கு மேலிருக்காது.

தபாற்கூலி வேறு.

தே. வே. அருணாசலன்
மாணிக்க விலாஸ்
ஜெயகொண்டபுரம்
காரைக்குடி (P. O.)

பார்ப்பனரல்லாதார் சென்னை மாகாண விசேஷ மாகாநாடு

கோயமுத்தூர்.

2—7—27

திருநெல்வேலி ஜில்லா போர்டு பிரசிடெண்டும், சென்னை சட்டசபை அங்கத்தினருமான திருவாளர் திவான் பகதூர் S. குமாரசாமி ரெட்டியார் B. A B L, M. L C. அவர்களின் சொற்பொழிவு.

சகோதரர்களே சகோதரிகளே!

இக்கவிசேஷ மகாநாட்டுக்குத் தலைமை பூணும் உயரிய கௌரவத்தை எனக்குத் தாங்கள் அளித்ததற்காக என் உள்ளத்தினின்று எழும் நன்றி சொல்லால் எடுத்துரைக்கும் தகையதன்று. புது முறைகளில் பிரவேசித்தலும் வேண்டுமா என்று ஆலோசிப்பது இந்த நிலைமையில் இம் மகாநாட்டிற்கு இதற்குமுன்னர், போர்கள் பல புரிந்த வீரர் ஒருவர் தலைமை வகித்தால் மிகப் பொருத்தமாயிருக்கும். ஆனால் உங்களுடைய ஆணைக்கஞ்சி நானும் இணங்கினேனாகவே இம் மகாநாட்டில் நடைபெறவேண்டிய காரியங்கள் அனைத்தும் செவ்வனே நடைபெறுமாறு இங்கு வந்துள்ள பிரதிநிதிகள் ஒவ்வொருவரும் ஒத்துநின்று துணைசெய்ய அன்பு கூரவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

நமது மாகாணத்தின் அரசியல் நிலை.

நம்முடைய மாகாணத்தின் இனவாரி ஏற்றத் தாழ்ச்சி இப்போது இருக்கிற முறையிலும் பொது ஜனங்களின் அரசியல் உணர்ச்சி தற்போது இருக்கிற நிலையிலும் பார்ப்பனர் கட்சி பார்ப்பனரல்லாதார் கட்சி என்று கட்சிகள் இரண்டே இம் மாகாணத்தில் இருக்கக்கூடும் என்று நமது மாபெருந் தலைவர்கள் உணர்ந்து பத்து வருஷத்துக்கு மேலாகிறது. இவ்வாறு நம் தலைவர்கள் உணர்ந்ததின் பலனாய் பார்ப்பனர் அல்லாதார் இயக்கம் உண்டாயது. இந்த இயக்கம் உண்மைபற்றி நிற்பது என்பதை நன்கறிந்தவர்களாய் பார்ப்பனரல்லாதார் அவ்வியக்கத்தில் ஈடுபடலாயினர். பார்ப்பனரும் இதைக் கண்டுகொண்டு தீர்ப்பகை கொண்டுவிட்டனர். நமதியக்கம் ஜனத்தொகையில் நூற்றுக்குத் தொண்ணூற்றேழு அடங்கிய சமுகாயத்தின் நன்மையை பாதுகாத்து வளர்க்கவேண்டும் என்ற நியாய நிலையில் நிற்கிறது. பார்ப்பனரல்லாதார் கட்சி தன் இயற்பெயர் கொண்டு நின்று யாருக்காக நிற்கிறதோ அவர்களுக்காக நேர்நின்று வெளிப்படையாகப் போர் புரிந்து வருகிறது.

ஆனால் மற்றக் கட்சியாகிய பார்ப்பனர் கட்சிகளோ தன் இயற்பெயர் கொண்டு நிற்கத் தைரியமில்லை பல பல விதமான பொய்ப் போர்வை போர்த்துக் கொண்டு இல்லாத பெயர்களை யெல்லாம் இட்டுக்கொண்டு கபடமாய்த் திரிகிறது. அவர்கள் பாவனைக்காக இரு கட்சியாகத் தங்களை திருத்திக்கொண்டு ஒன்றை மற்றொன்று எதிர்ப்பதுபோல மோடி வைத்தாடி உலகத்தாருக்கு சிரிப்புண்டாக்குகிறார்கள். எதற்காக வென்றால் ஒரு பகுதியார் துரைத்தனத்தார் தயவைச் சம்பாதித்துக்கொண்டு உயர்ந்த உத்தியோக பதவிகளைத் தமக்கு ஆக்கிக் கொள்ளுகிறார்கள். இதற்கு விரோதமென்று பாவனை பண்ணுகிற மற்றைப் பகுதியார் ஜனங்களை ஏமாற்றி காங்கிரஸ் சபை நிர்வாகத்தில் முதன்மை பெற்றுக் கொள்ளுகிறார்கள். இதற்காகத்தான் மேலே சொன்ன போலிக கட்சி யெல்லாம், பார்ப்பனர் செய்கிற நாடகக்கூத்து ஒவ்வொன்றையும் வெளியாக்கி காங்கிரஸ் தலைவருக்கும் கவுன்சில் மெம்பருக்கும் (கவர்னர் சபை அங்கத்தினருக்கும்) இடையே ஏதோ இருப்பது போற்றோன்றும் மாயத்திரையை இல்லை என்று ஆக்கிவிட வேண்டியது நமது கடமை. இன்னும் ஏமாயஸ்தாயிருக்கிற சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்த சிலர் இப்போது குட்டுகளை எல்லாம் வெளியிட்டு விட்ட நிலைமையில் நாம் களிகூறுகிறோம் என்றால் அது நம் எதிரிகள் தோல்வியுற்று அடைந்துள்ள அவமானம் பற்றியல்ல. ஆனால் உள்ளே மறைந்திருந்து ஆட்டிவைத்த சூட்சிகளை யெல்லாம் உலகத்தாருக்கு வெளியாக்கி ஜன சமூகத்துக்கு அவர்கள் செய்த பேருபகாரம் பற்றியே யென்க. அவர்கள் மாயா வலையை நீக்கி அதன் மறைவிலிருந்த ஓர் அற்புதக் காட்சியை வெளியிட்டு விட்டார்கள். நடப்பதற்கியலாத விகட ராமன் குதிரைகள் போன்ற மும்மந்திரிகளையும் முன்னே நின்று கவுன்சில் மெம்பர் கடிவாளத்தைத் தொட்டிழுக்கவும் பின்னிருந்து காங்கிரஸ் தலைவர் தள்ளவும் சண்டிக் குதிரைகள் வலம் வரும் காட்சியை வெளியிட்டு உலக இருளை நீக்கிய அவர்களது பெரும் புண்ணியத்துக்காகவன்றோ அவர்களைப் போற்றுகிறோம்.

சுயராஜ்யக் கட்சியார் ஆர்ப்பரித்துச் சொல்லும் 'தேசிய நலம்' என்ற சொல்லெல்லாம் உள்ளீடாகப் புதைந்து கிடக்கும் 'பார்ப்பன நலத்தை' முற்றிலும் மறைத்தபாடில்லை. தென்னிந்திய பார்ப்பன நிகண்டில் 'பார்ப்பனநலத்திற்குப் பல பிரதி பதங்கள் உண்டு. "தேசிய நலம்" "சுயராஜ்யத் தொண்டு" "தேச பக்தி" என்பன அவற்றுட்சில. சென்னை சுயராஜ்யக்கட்சியார் இப்போது செய்துவரும் காரியங்களில் எதைப்பார்த்தாலுஞ்சரி, அதற்குள் நிச்சயமாக பார்ப்பனத்துவம் இருக்கும். உண்மையில் சுயராஜ்யம் பார்ப்பனருக்கு விஷயமல்ல. சுராஜ்யத்தை அடைய அவர்களுக்கு விருப்பமே கிடையாது. ஏதோ உயிர்பிழைத்திருக்கும் பார்ப்பனரல்லாதாரை அடியோடு தொலைப்பதே அவர்கள் விருப்பம். இதற்கு இடையூறாயிருக்கின்ற "ஜஸ்டிஸ்" கட்சியை எப்படியாவது இல்லாமல் ஆக்கிவிடவேண்டும். சென்னை சுயராஜ்யக் கட்சியின் உதவி தலைவர் சத்திய மூர்த்தி ஐயர் அவர்கள் "ஜஸ்டிஸ்" மந்திரிகள் அதிகாரத்துக்கு வரவொட்டாது தடுப்பதில் நான் தூக்கில் போடப்பட்டு ஒழிந்துவிட வேண்டுமென்றிருந்தாலும் அதைப் பொருட்படுத்தமாட்டேன்' என்று வீரிட்டாரே அதன் பொருள்தான் என்ன?

சுயராஜ்யத்தில் அவருக்கு உள்ள ஆசையைவிட பார்ப்பனரல்லாத தீயோரை நிர்மூலமாக்குவதில் அதிக ஆசை. தென்னாட்டுப் பார்ப்பனர் தங்கள் காரியத்தை முடிப்பதற்கு எத்தகைய கேடான முறையையும் அனுசரிக்கப் பின்வாங்கார்கள் அவர்களை நம்பி ஏமாந்துபோகிற நம்மவரையே அவர்கள் கருவியாக வைத்துக் கொள்ளுகிறார்கள் நம் சகோதரர்கள் இப்போது மோசடிகளையெல்லாம் உணர்ந்து கொண்டு ஒருவர்பின் ஒருவராக பார்ப்பனரை விட்டுவிட்டு நம் பக்கம் திரும்பி வந்து உண்மையை நன்குணர்ந்த சீரியோராய் நம்முடைய விடுதலைக்காக ஏனையோரைவிட அதிக வீரத்தோடு போர்புரிய முன் வந்திருக்கிறார்கள். இன்னும் உண்மை தெரியாது வழிதப்பி உழலும் எஞ்சியுள்ள நம்மவரையும் நம்பக்கம் கொண்டுவந்துவிட எல்லாம் வல்ல இறைவன் திருவருள் பாலிப்பாராக.

பார்ப்பனத்துவமே தேச முன்னேற்றத்துக்கு இடையூறு.

ஏறக்குறைய நூறு வருஷங்களுக்கு முன் நமது தென் நாட்டிற்கு பிரஞ்சு தேசத்தவரான ஆபே டுபாய் என்ற துறவி ஒருவர் வந்தார். அவர் நம்முடைய சன்னியாசிகள் போலவே உடை தரித்துக்கொண்டு ஜனங்களோடு அன்யோன்யமாய்ப் பழகி அவர்களுடைய நடை உடை பாவனைகளை நேரில் அறிந்து அவைகளை ஒரு அரிய நூலாக எழுதி வெளியிட்டார். அவர் என்ன சொல்லுகிறார் என்றால்,

"அதிதீவிரமாக சுயநலம் பாராட்டுவது பார்ப்பன குணங்களில் ஒன்று தங்களுக்கு உரிமையாகக்கூடாத பொருளோ உலகத்தி

வில்லை என்றும் பிறிட்டத்திலிருந்து தாங்கள் எதுவும் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் பிறர்க்குத் தாங்கள் பிரதிபலனாகச் செய்ய வேண்டிய கடமை ஒன்றுமே இல்லை என்றும் எண்ணுபவர்கள். இவ்வெண்ணத்தை ஒரு அபூர்வ தர்மம்போல் கைக்கொண்டவர்கள். தமக்கு ஒரு காரியம் ஆகவேண்டுமானால் அதற்காக ஜனங்களுடைய நன்மையை தொலைப்பதானாலும் சரி தேசத்தையே தொலைப்பதானாலும் சரி சிறிதும் அஞ்சாதவர்கள். தன் காரியத்துக்காக ராஜத்துரோகம் செய்யவும் [illegible] கொல்லவும் வேறு பாதகச் செயல் எது வேண்டுமானாலும் செய்யவும் துணிவார்கள். பார்ப்பனரல்லாத ஜாதியார் எவரையும் ஒரே படியாக இகழ வேண்டுமென்பதும் வெறுக்கவேண்டும் என்பதும் அவர்கள் கட்டுப்பாடு. தப்பித் தவறி ஏதேனும் அவர்கள் நன்மை செய்வதாயிருந்தால் அது தன் இனத்துக்காகத்தானிருக்கும். உலகத்திலுள்ள மற்றவர்கள் எல்லாம் தனக்கு எவ்வளவோ கீழ்ப்பட்டவர்கள் என்ற மந்திரோபதேசம் அவர்களுக்குப் பாலப்பருவம் முதலே செய்யப்பட்டு வருகின்றன. இவர்கள் தான் பிராமணர்கள்" என்று எழுதி இருக்கிறார்.

மேற்கண்ட சொற்கள் என்னுடையவைகள் அல்ல அவற்றைக் கூறியவருக்கு ஜாதித்துவேஷமாவது அரசியல் கட்சித்துவேஷமாவது கிடையாதென்பது வெளிப்படை. அவர் பக்ஷபாதமற்ற அன்னிய நாட்டவர். ஆகவே நூறு வருஷத்துக்கு முன் அவர் கொண்ட அபிப்பிராயம் இந்த மாகாணத்திலுள்ள பார்ப்பனர்களுடைய மனப்பான்மைக்கு இப்போது எவ்வளவு பொருத்தமாயிற்றென்பதை நாம் கண்ணாரக் காண்கிறோம்.

இந்தச் சுயநலப்பான்மைதான் நம்முடைய தேசிய முன்னேற்றத்துக்கு ஒரு சனியனாய் நிற்கிறது. அவர்கள் என்ன என்ன வேஷமோ போடுகிறார்கள். எத்தனையோ விதத்தில் உண்மையை மறைக்கப்பார்க்கிறார்கள். ஆயினும் தட்டு வெளியாகி விடுகிறது. தங்களுடைய இனத்திற்கென்றே அநேக பதவிகளை ஒதுக்கி வைத்துக்கொள்வதற்கான முயற்சியே அவர்களுக்கு சதாவேலை என்பது யாருக்கும் தெரிந்த விஷயம்.

இன்னும் அவர்கள் தங்களைத் தவிர்த்த ஜனசமூகமெல்லாம் மிக்க இழிந்தவர்கள் உபயோகமற்றவர்கள் என்று கருதுகிறார்கள் இந்த நிலையில் தேசிய நன்மை அடைவதற்கு அவர்கள் ஒத்துழைக்கிறார்கள் என்று சொல்லஎவ்வாறாவது இடம்கொடுக்குமா? தேசிய நன்மைக்கு உழைப்பவர்களுக்கு லட்சணம் இவைகள்தானா?.

எல்லாம் தனக்குத் தனக்கு என்ற சுபாவம் அவர்களை விட்டு ஒழியவேண்டும். [illegible] உலகிற்கெல்லாம் தான்தான் ஏவுதற்கர்த்தா என்ற அகம்பாவம் அவர்களைவிட்டு அடியோடு போகவேண்டும். அதுவரையும் அவர்களும் நாமும் ஒன்றென்று கருதி ஒத்துழைக்க இடமில்லை. பரஸ்பர நம்பிக்கையோடு ஒத்துழைப்பதற்கு எல்லோரும் சமம் என்ற சமத்துவ உணர்ச்சி இன்றியமையாதது. அத்தகைய உணர்ச்சி கைகூடும் வரை நம்முடைய விடுதலைக்கு நாமே தனித்து நின்று பாடுபடவேண்டும். இனவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்று நாம் சொன்னால் அது நிலையாய் இருக்கவேண்டுமென்று நாம் சொல்லவில்லை, சமுதாயம் சீர்திருத்தம் அடையும்வரை தற்கால சாந்தியாக வைத்துக்கொள்ளவேண்டுமென்பதே நமது கொள்கை. அதையே ஒரு குறிக்கோளாகக் கருதவில்லை. ஆனால் ஜாதிய சமத்துவத்தை அடைவதற்கு அதுதான் ஒரே வழியென்று அதைக் கைக்கொண்டிருக்கிறோம். நம்முடைய பார்ப்பன தேசபக்தர்கள் அவர்களுடைய ஆடம்பரச் சொற்களுக்கிணங்க செய்கையில் அநுதாபம் காட்டுவார்களானால் அவர்களிடத்தில் நமக்கு நம்பிக்கை வைக்கக் காரணம் வந்துவிட்டதென்று சொல்லலாம்.

நாட்டிற்கு வாஸ்தவத்தில் உரிமையான குடிகள் நாமே. நமக்குத்தான் சுயராஜ்யம் வேண்டும். நிலமே இல்லாத [illegible]யங்களுக்கும் வரி கொடுப்பது இன்னதென்றே தெரியாத ஆண்டிகளுக்குமா சுயராஜ்யத்தில் தேட்டமிருக்கும்? நிலவான்களாயிருக்கின்ற நாம்தான் உலகத்தில் வேறெங்குமில்லாத அபரிமிதமான நிலவரிக்கு ஆளாய் நைந்துகொண்டிருக்கிறோம். நாட்டிற்கு உண்மையான பிரதிநிதிகளாகிய நாம் சுயராஜ்யத்திற்காகப் போராடி எவ்விதத்திலாவது அதைக் கைக்கொள்ளவேண்டும்.

ஆகவே நம்முடைய தேசிய ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் பெரும் இடையூறாயிருப்பது எதுவென்றால் சென்னை மாகாணத்துப் பார்ப்பனச் சூழ்ச்சியே. புறநாட்டார் வந்து ஆளும் ஆட்சியில் உண்மையில் அவர்களுக்குத் கொண்டாட்டந்தான். அது இந்நாட்டில் நிலைபெற்றிருப்பதே அவர்களுக்கு லாபம் உத்தியோகவர்க்கத்தவர்களுடைய பதவியைச் சம்பாதித்துக்கொள்ளும் வழியெல்லாம் அவர்களுக்கு நன்றாய்த்தெரியும், அதற்காக நேர் வாசல்விட்டுப் புறவாசல் புகுவதில் அவர்களே சமர்த்தர். சுயராஜ்யம் அவர்களுக்குப் பொருந்தவே பொருந்தாது. சுயராஜ்யம் வந்தால் அவர்களுடைய ஏக போக அநுபோகமெல்லாம் தொலைந்துவிடும்.

ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்களைத் தெரியாதவர் இங்கு யாருமில்லை. அவர்கள் பல நாள் பழகியதால் காங்கிரஸ் தலைவர் ஐயங்கார் அவர்களை நன்கறிந்தவர். செட்டியார் அவர்கள் சில நாட்களுக்கு முன் நமக்கு எடுத்துக்கூறியது என்னவென்றால் "தன் இனம் மாத்திரம் வாழவேண்டும் என்று எண்ணுவதில் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்கார் அவர்களுக்குச் சமானமானவர் சென்னை மாகாணத்தில் யாருமே இல்லை என்று உறுதி கூறுவேன்" என்றார்கள். ஆகவே ஒரு இனத்தின் ஆதிக்கம் கூடாதென்று சொல்லி ஜாதீய சமத்துவம் வேண்டும் என்று விரும்பும் நாம் இனப்பேய் பிடித்தவர்களா? அல்லது ஒரு இனத்தின் ஆதிக்கம் இருப்பதில் ஆனந்தம் கொண்டு அதை என்றென்றும் நிலைத்திருப்பதற்காக அங்கு மிங்கும் ஓடித் திரிந்துகொண்டிருக்கிற அவர்கள் இனப்பேய் பிடித்தவர்களா? என்று பாருங்கள்.

சுயராஜ்யக் கட்சியார்கள் தங்கள் சொற்படி இணங்கி வருகிற "சுயேச்சைக்" கட்சியினரை வாய்த்த கருவியாகக்கொண்டு ஆறுமாத காலமாக ஆட்சிபுரிந்து வருகின்ற இந்த ஆறுமாத காலத்தில்தான் இதற்கு முன் என்றுமில்லாதபடி பார்ப்பனருக்கும் பார்ப்பனரல்லாத ஏனையோருக்கும் இடையே மனக்கொதிப்பு அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. இரு இனத்தாருக்கும் இடையே உள்ள பிளவு இப்போதிருக்கிறபடி இதற்குமுன் எக்காலத்திலும் இருந்ததில்லை. இம் மாகாணத்தில் பார்ப்பனருக்கும் ஏனையோருக்கும் இடையே உள்ள பிளவை காங்கிரஸ் தலைவர் ஏதோ தீர்த்துவிட்டதாகச் சொல்லி வடக்கே தூர தேசத்திலுள்ள காங்கிரஸைச் சேர்ந்த ஒரு மகம் [illegible] ஏமாற்றக்கூடும், ஆனால் இந்த நாட்டிலேயே உயிர் வாழ்ந்து தினம் தினம் கஷ்டத்திற்கெல்லாம் ஆளாயிருக்கிற நமக்கு அவரும் அவருடைய சார்பாரும் சாதித்ததெல்லாம் தெரியும், அவர்களுடைய பெரும் முயற்சியின் பலனைச் சித்தித்தது ஒன்றே. முன்னிலும் பன்மடங்காய் நமக்கும் அவர்களுக்கும் உள்ள தூரம் நீண்டுவிட்டது.

"தேசிய ஒற்றுமைக்கென்றே உடலெடுத்துவந்த இந்த அவதாரபுருஷர்" ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்கார் வடநாட்டில் ஒற்றுமைக்காகச் செய்யும் வேலையை தன் தமிழ் நாட்டிலேயே ஆரம்பிக்கக்கூடாதா? இந்த காங்கிரஸ் தலைவரே முன் ஒரு சமயம் நம்முடைய பிளவைத் தீர்த்துவிடுவதே தன் முதல்வேலை என்று சொல்லியிருக்கிறார். இப்போது ஏன் அதை அவர் புறக்கணிக்கின்றார்? அதற்குக்காரணம் இப்போதுபார்ப்பனச்சுக்கிரன் உச்சத்திலிருப்பதாய் எண்ணியோ? அது என்றும் உச்சத்தில் இருக்கமுடியாதென்று அறியாரோ? பார்ப்பனரல்லாதாரை சிறிது காலத்திற்கு ஏமாற்றலாம். ஆனால் என்றென்றும் ஏமாற்றமுடியாது. இந்த மாகாணத்தில் இப்போது ஆட்சிபுரிந்துவருகிற பார்ப்பனரல்லாத மந்திரிகள் உண்மையில் பார்ப்பனருடைய கையாளாகயிருந்துவருகிறார்கள். ஆனால் இவர்களும் என்றும் பார்ப்பனக் கொடுமையைப் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது. அவர்களும் கிளம்பிவிடுவது நிச்சயம். இத்தகைய ஒவ்வாதநட்பெல்லாம் கடும்பகையாய் வெகு சீக்கிரத்தில் ஆகிவிடப்போகிறது. இவ்வுத்தியோகத்திலிருக்கிற தங்கள் அடிமைகளை என்றென்றும் இப்பார்ப்பனர் சித்திரவதைசெய்து இணக்கிக்கொண்டேயிருக்கலாம் என்பது முடியாத காரியம்.

சுயராஜ்யக் கட்சித் தலைவர் நாணயஸ்தராகில் அவர் செய்யவேண்டுவது என்னவென்றால் தன்னிடம் உள்ள இனநலப்பேயை ஓட்டிவிட்டு அதற்குத் தக்கபடிவிமோசனம் தேடவேண்டியதேயொழிய, பூனை தன் கண்ணை மூடிவிட்டால் உலகமே அஸ்தமித்துப் போய்விடுமென்று எண்ணும் கதைபோல உண்மையைப் பார்க்கக் கண்ணைத் திறவேன் என்றிருப்பதல்ல. காங்கிரஸ் தலைவர் தன் மாகாணத்துக் காரியங்களை

[இதன் தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க]

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

றுப்பென்றும் மற்றவர் ஈனுந்த ஈனை பொறுப்பென்றும் விளங்கவில்லை. இந்தப் பொய்யும் புரட்டும் பரவிக்கொண்டிருக்கும் பொழுது நாம் அதைத் தடுக்க ஒன்றும் செய்யாது வாளா இருந்து விட்டோம். நம் மந்திரிமார் செய்த நன்மை எல்லாம் குடத்துக்குள் வைத்த விளக்காய் விட்டன. இந்த அக்கிரமப் போரில் பொய் வென்றது. மெய் தோற்றுப் போய்விட்டது. அதன் பயனாய் மந்திரி வர்க்கத்தையே தொலைத்துவிடவோமென்பாரையும் சிறிது விட்டுப்பார்ப்போமென்ற உணர்ச்சி தேசத்தில் சற்று உதித்தது.

எதிரிகள் நம்முடைய தோல்வியைப் பற்றி எவ்வளவு கொண்டாட்டம். கொண்டாடுவதுதான் என்ன? தேர்தலில் நமக்கு வந்த தோல்வி உண்மையில் நமக்குக் கிட்டாத பெரும்பேறு.

சட்டசபையில் நாம்தான் ஒரு கட்சி. துரைத்தனத்தை எதிர்ப்பவர்களும் நாம் ஒருவரே. சுயேச்சையாளிகள் தேர்தல் முடிந்தபின் ஓர் இரவில் உண்டாகி ஓர் பகலில் பட்டுவிடும் காளான்கள்போல் உண்டானார்கள், அவர்கள் ஒரு கட்சியே இல்லை.

சட்டசபை தேர்தலுக்குப்பிறகு தேசத்திலேயே ஒரு புதுக்கிளர்ச்சி பிறந்திருக்கிறது. எங்கே பார்த்தாலும் பார்ப்பனரல்லாதார் ஆவேசத்தோடு அரசியல் காரியாதிகளில் ஊக்கங்காட்டி வருகிறார்கள். தேர்தல் முடிந்து ஒரு மாதம் ஆகவும் நமது மகாநாடு மதுரையில் கூடியது. அதில் ஜனங்களுக்கிருந்த உற்சாகமும் நம் தலைவர்களுக்குக் காட்டிய அன்பும் ஆதரவும் உத்தியோகத்தில் இருந்தபோதுங்கூட நாம் கண்டதில்லை, விளம்பரம் செய்யப்போதுமான காலங்கூடவில்லை. இருந்தாலும் ஒரு நொடியில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்து கூடினார்கள், அதுமாதிரி கூட்டமும் குதூகலமும் நாம் பார்த்ததில்லை. பார்ப்பன நாட்டின் நன்னடுவே சமீபத்தில் நடந்த தஞ்சை ஜில்லா மகாநாடும் நம்மவருக்கு நம் கட்சியில உள்ள ஆர்வத்தை நன்கெடுத்துக் காட்டி விளக்கியது.

சட்டசபை கலைந்து வேறு தேர்தல் ஏற்பட்டுவிடுமோ என்று சுயராஜ்யக்கக்ஷியார் நடுங்கும் நடுக்கமும், தேசத்தில் நமக்குள்ள பலத்துக்கோர் சிறந்த அத்தாக்ஷியே.

இந்த ஊக்கத்தை பிரசாரத்தொழில் செய்து நம் தலைவர்கள் வளர்த்து வரவேண்டியது அவசியம். புதுப்பணிகள் ஒன்றின் பின் ஒன்றாக ஆரம்பித்து அதை இயற்றுவதில் நம்மவர்களுடைய ஊக்கம் வளர்ந்து கொண்டு வரவேண்டும். வேலையில்லாமல் அவ்வூக்கம் துருவேற விட்டுவிடலாகாது.

சுயேச்சையாளர்

சுயேச்சையாளரைப்பற்றியும் அவர்கள் மந்திரிகளைப்பற்றியும் எவ்வளவோ பற்பல வகையில் சொல்லியாய்விட்டது இனிமேல் அதிகமாக ஒன்றும் சொல்ல வேண்டுவதில்லை. மந்திரி இரண்டுபேரை அதிகார வர்க்கத்தினர் அவர்களைத் தூக்கி பதவியில் வைத்துவிட்டார்கள். அரசியல் நீதிக்கு விரோதமாகவும், மரியாதைகெட்டும், பதவியில் இருக்கிறது என்றால், அவர்களிடமிருந்து எதிர்பார்க்கத்தக்கதல்ல. தங்களுடைய சுயராஜ்யத்தலைவர்களிடமிருந்து படித்த பாடம். அவர்கள் ஒரு வம்புக்கும் போகாமல் சுகமாக அந்த வீற்றிருந்தால் ஜனங்கள் அவர்களைப்பார்த்து ஐயோ என்று பரிதாபப்படுவார்களேயொழிய கோபங் கொள்ளார்கள். ஆனால் அவர்கள் செய்கிற வம்புக்கோ அளவில்லை. அவர்களுடைய அதிகாரமெல்லாம் சில நாளைய வியாபாரம் [illegible] வருகிறது இன்றைக்கோ, நாளைக்கோ, என்று நாட்களை விரல்வைத்து எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். விதிவசத்தால் தங்களுக்குக் கிடைக்கும் சொற்பகாலத்திற்குள் எவ்வளவு செய்யக்கூடுமோ அவ்வளவு அக்ரமத்தையும் செய்து முடித்துவிடவேண்டுமென்று ராப்பகலாக முயற்சி செய்து வருகிறார்கள். அவர்கள் நிர்வாகத்தில செய்துள்ள அக்கிரமங்களைச் சொல்ல முடியாது. வேண்டியவனாயிருந்தால் ஆண்டிக்கு அரசபதவி. அவர்களுடைய அதிகாரத்தின் ஸ்தாபனமென்ன பொறுப்பென்ன என்பதைச் சற்றும் உணராது மனம்போன போக்கில் தாறுமாறாக நடந்து கொண்டு இருக்கிறார்கள். இதற்கு மேல் போக முடியாது என்று சொல்லும் அத்தகைய கேட்டுக்கு அவர்கள் ஆட்சி வந்தாய் விட்டது.

கிராமமுன்னேற்றம்.

நாட்டின் வளர்ச்சிக்கென்று நம்முடைய கட்சியார் செய்யவேண்டிய பணிகளில் கிராம முன்னேற்றப் பணி மிக முக்கியமானதென்று கூறுவேன். நம்முடைய ஜனத்தொகையில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் கிராமவாசிகள். நம்முடைய தேசம சம்பந்தப்பட்டமட்டில் "நாடு வசிப்பது பட்டியில்தான்" என்று கூசாமல சொல்லலாம் ஆயினும் தற்காலத்திய சீர்திருத்த ஏற்பாடுகள் இன்னும் கிராமத்தை எட்டிப்பார்த்தபாடில்லை. நமது கிராமவாசிகளில் பெரும்பாலார் உலகத்தில் எங்கும் காணாதபடி வறுமையில் கிடந்து உழலுகிறார்கள மகாத்மா காந்தி சொல்லுகிறதைக் கேளுங்கள்- "அரைவயிற்றுக்கஞ்சியில்லாத ஏழைகள் எத்தனையோபேர் மெள்ள மெள்ள உயிரற்றுப்போய்க்கொண்டிருக்கிறார்கள்" சர்க்கார் கணக்குகளை வைத்து செப்படி வித்தை செய்வதால் கிராமங்களில் எலும்பெலும்பாய் நிற்கிற ஏழைக்குடிகளை மறைத்துவிடமுடியுமா. மனித ஜென்மத்திற்குச் செய்தகொடுமை இதுபோல உலகத்தில் இதற்குமுன்னர் என்றும் கண்டதில்லை. கடவுள் ஒருவர் உண்டென்றால் இங்கிலாந்திலுள்ளவர்களும் இந்தியாவிலுள்ள நகரவாசிகளும் தான் இதற்குப் பழி ஆவார்கள்" என்கிறார். கிராமக் குடிகளின் பரிதாப நிலையை இதைவிட பயங்கரமாகச் சொற்கொண்டு காட்ட முடியாது. வாழ்நாள் முழுதும் வயிறாரச் சாப்பிடுகிறது என்னவென்று தெரியாதவர் நமக்குள் ! கோடிக்கணக்காகவுண்டு அதுபோக மிஞ்சியவர்கள் இன்றியமையாத வசதிகளில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்; கல்விகற்க இடம்போதாது; விளை பொருள்கள் உண்டாகிற இடத்திற்கும் விற்பனையாகும் இடத்துக்கும் அவர்கள் சாக்குகள் போகவா வண்டிப்பாதை கிடையாது சரியான ஜலவசதி கிடையாது. வைத்திய வசதியும் அப்படியே. அவர்களுடைய கஷ்டங்களோ பழங்கதைதான். ஆனால் ஒன்றும் ஒழிவதாயில்லை.

தேசபக்தர்கள் என்றால் கிராமவாசிகளின் தரித்திரத்தையும் கஷ்டத்தையும் போக்க வழி தேடவேண்டும். அவர்களது அறியாமையை நீக்க முயற்சி செய்யவேண்டும். அப்போதுதான் உண்மையான தேசிய வளர்ச்சி உண்டாகும். கிராமவாசிகளைப் பின்நிற்க விட்டுவிட்டு கிரம்பப்படித்த நகரவாசிகள் மட்டும் படையாக முன்னேறிப் பறந்திருந்து தேசிய வலியுண்டென்று எவ்விதத்திலும் சொல்ல முடியாது,

கிராம முன்னேற்றத்திற்கு நமது ஜஸ்டிஸ் மந்திரிகள் தான் நாட்டம் செய்தார்கள். அதன் அவசியத்தை நன்குணர்ந்து அச்சமயம் பணமுட்டை எவ்வளவு யிருந்தபோதிலும் அதையும் கவனியாது கிராமப் பணிக்கு எவ்வளவோ பொருளுதவி செய்தார்கள். பிரதமக் கல்வியை விருத்தி செய்தார்கள். கிராம வைத்திய சாலைகள் அனேகம் ஏற்படுத்தினார்கள் அவர்கள் ஆட்சியால் வண்டிப்பாதைகள் நூதனமாக எவ்வளவோ போடப்பட்டன. கிராம பஞ்சாயத்துக்கள் பற்பல இடங்களில் ஏற்படுத்தினார்கள் எத்தனையோ விதத்தில் கிராம வசதிகளை விருத்தி செய்தார்கள் நம்முடைய மந்திரிமார் செய்து முடித்த பணிகளுள் இவை சிலவே. இப்போது பொருளாதாரம் வளமாயிருந்தும் கூட நம்முடைய மந்திரிகள் காலத்து நடந்த மாதிரி கிராம அபிவிருத்தி நடைபெறவில்லை. கிராமவிருத்தி சம்பந்தமாக துரைத்தனத்தார் இன்னும் பண்டைய லோபிகள்தான். இதற்கு கிராமவாசிகள் முன் ஜென்மத்தில் என்ன பாவம் தான் செய்தார்களோ தெரியவில்லை.

சென்ற மார்ச்சுமாத வரவு செலவு திட்டத்தைப்பற்றி பேசும்போது "கிராம விருத்தி நிதி" யொன்று பிரத்தியேகமாக வைக்கவேண்டும் என்றும் அதை கிராம விருத்தி ஒன்றுக்கே உபயோகப்படுத்தவேண்டும் என்றும் இதர காரியங்களுக்காக அதைத் தொட்டுவிடவே கூடாது என்றும் வற்புறுத்தப்பட்டது. துரைத்தனத்தார் அதை அங்கீகரித்ததற்கு ஒரு அடையாளம்கூட இன்னும் காணவில்லை.

கனம் மந்திரி ரங்கநாத முதலியார் அவர்கள் இவ்விஷயத்தில் நமது மகாணத்தின் குடிகளின நன்றிக்குஉரித்தாயிருக்கிறார்கள். மேற்கண்ட விஷயத்துக்கு ஓர் நிதி சேர்ப்பதற்கு அவர்கள் சொந்தத்தில் முயற்சிக்கிறார்கள். அதற்குச் சிறந்த நன்கொடை தான் செய்வதாகவும் வாக்களித்திருக்கிறார்கள். இவ் விஷயத்தில் துரைத்தனத்தார் இவர்களை பின்பற்றுவாராக.

கிராமவாசிகளுக்குத்தங்களுடைய நிலைமை எப்படியிருக்கிறதென்றும் சமுதாயத்தில் தங்கள் ஸ்தானம் இன்னதென்றும் உண்மையில் தங்களுக்கு வேண்டியவர் இன்னார் என்றும் உணரும்படி பிரசாரத்தொழில் அதிதீவிரமாக நடத்தவேண்டும். நாம் தாம்

(இதன் தொடர்ச்சி 9ம் பக்கம் பார்க்க)



குடி அரசு.

ஈரோடு, பிரபவ-ஹூ ஆனி 19௨

கோவை மகாநாடு.

(ஈ. வெ. கி)

நமது மாகாண பார்ப்பனரல்லாதாரின் விசேஷ மகாநாடு இன்று கோவையில் கூடுகிறது. நீண்ட காலமாக நம்முள் சிதறிக்கிடந்த அபிப்பிராய பேதமுடைய ராஜீய பார்ப்பனரல்லாதார்களான கனவான்கள் யாவரும் விஜயம் செய்திருக்கிறார்கள். இதில் ஒரு நன்முடிவுக்கு நாம் வாராவிட்டால் நமது நிலை என்ன ஆகுமென்பதை முன்பே எழுதி இருக்கிறோம். "சுயமரியாதை" வேண்டுமென்றும் அதற்கு நமக்கென ஒரு தனி இயக்கம் வேண்டுவது அவசியமென்றும், காலம் சென்ற நமது தலைவர்களான திரு. நாயர் பெருமானும், தியாகராயர் பெருமானும் முதன் முதல் எந்த இடத்தில் இயக்கம் தோற்றுவிக்கப்பட்டதோ அதே இடத்தில் தான் அவ்வியக்கத்தின் நெருக்கடியான காலத்தில் ஒரு முடிவு காணவும் இன்று கூடி இருக்கிறோம். மாகாண பார்ப்பனரல்லாதார் மகாநாடும், ஜில்லா இளைஞர்கள் மகாநாடும் ஒரே இடத்தில் கூடி இருக்கிறது. இவ்விரு மகாநாடுகளின் வரவேற்புக் கழகத் தலைவர் பிரசங்கமும், மகாநாட்டுத் தலைவர் பிரசங்கமும், நமது பார்வைக்கு வந்து விட்டது.

திருவாளர் ரெத்தின சபாபதிக் கவுண்டர் மகாநாட்டு வரவேற்புக் கழகத் தலைவரவர்கள் பார்ப்பனர் கொடுமையையும், பார்ப்பனச் சூழ்ச்சிகளையும், தாராளமாக எடுத்துக்காட்டி கண்டித்திருப்பதோடு, காங்கிரஸில் சேர வேண்டுமென்ற அபிப்பிராயத்தையே முக்கியமாகக் காட்டி இருக்கிறார். அதற்குப் பல காரணங்களைச் சொல்லி இருக்கிறார் எனினும் காங்கிரஸைப்பற்றி இதுவரையில நாம் சொல்லிவந்த விஷயங்களில ஒன்றுக்காவது சரியான பதிலில்லை. மகாநாட்டுத் தலைவர் திவான்பஹதூர் எஸ் குமாரசாமி ரெட்டியார் எம். எல். ஸி. அவர்கள் தமது தலைமை உபன்யாசத்தில், நமது கட்சியின் இன்றைய நிலையைப்பற்றியும், காங்கிரஸை பார்ப்பனர்கள் தங்கள் நன்மைக்கு எப்படி உபயோகப் படுத்தி வருகிறார்கள் என்பதைப்பற்றியும், காங்கிரஸின் மூலமாகப் பார்ப்பனர்கள் தங்கள் வகுப்பு நலன் ஒன்றைமட்டும் கோரி எவ்விதம் நடந்துகொள்ளுகிறார்களென்பதை பற்றியும் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீமான் சீனிவாசஐயங்கார் தன்னுடைய வகுப்பு நலனுக்காக இதுவரையில் செய்து வந்த சூழ்ச்சிகளைப்பற்றியும், மந்திரிகளை தங்களின் கலத்திற்கென்றே சிருஷ்டித்து அவர்களை எப்படி ஆட்டி வருகிறார் என்பதைப்பற்றியும் விஸ்தாரமாகச் சொல்லியிருப்பதோடு கிராம அபிவிருத்தி, தீர்மானத்திட்டம் எதிர்காலத்தில் நமக்குள்ள பெரும்பொறுப்பு, கல்வி, சுகாதாரம், கைத்தொழிலபிவிருத்தி, விவசாயம், நீர்ப்பாசனம் முதலிய விஷயங்களைப்பற்றியும் உத்தியோகம் முதலிய விஷயங்களில் அரசாங்கத்தின் மனப்பான்மையை விளக்கிக் காட்டிக் கண்டித்தும், இருப்பதோடு, காங்கிரஸ் பிரவேசத்தைப்பற்றி பிரவேசத்துக்கு அனுகூலமாகச் சொல்லப்படுவதில் சிலதையும் பிரதிகூலமாகச் சொல்லப்படும் விஷயங்களில் சிலதையும் எடுத்துக்காட்டி இருப்பதோடு அதன் முடிவைப் பொது ஜனங்களுக்கே விட்டு விட்டதாகவும் எழுதி இருக்கிறார்.

இளைஞர் மகாநாட்டின் வரவேற்புத் தலைவர் திருவாளர் சி. வி. வி. சுப்பையப்ப செட்டியார் அவர்கள் தமது உரையில் இதுவரையில் இளைஞர்கள் சமுதாய விஷயம் ஒன்றிலேயே இருந்து வந்ததாகவும், இன்று நமது தலைவர்களின் செய்கை இளைஞர்களை அரசியலிலும் தலையிடத்தூண்டிவிடுமோவென்று ஐயுறுவதாகவும் கூறிவிட்டு காங்கிரஸ் பிரவேசம் கூடாதென்றும் அது மாய்கை என்றும், இன்றுள்ள சிறு ஐக்கியபாவம் கூட பிரவேசத்தால் நமது தலைவர்களுக்கு இராதென்றும் அரசியலும், சமூக இயலும், உடலும், உயிரும் போன்றதென்றும், இவ்விரண்டையும் அனுஷ்டிக்கும் காலங்களிலெல்லாம் நமது இயக்கத்திற்குச் செல்வாக்கிருந்ததாகவும், அரசியல் ஒன்றையே கவனித்ததால் தான் தேர்தலில் நமது கட்சித் தோற்றதென்றும், நியாயக்கட்சியின நமது திட்டத்தை நமது மாகாணமின்றி மற்ற மாகாண வாசிகளும் பின்பற்றி வருகிறார்கள என்றும், அவர்களின் சம்மதமின்றி காங்கிரஸ் பிரவேசத்தைப்பற்றிச் சிந்திப்பதே பொருத்தமற்றதென்றும் ராயல்கமிஷனிடம் சாக்ஷி கொடுத்து அதன்பயனைக்கொண்டு சமூகசன்மைகளை செய்ய அகில இந்திய இயக்கமாக வேண்டுமானால் அதற்குக் காங்கிரஸை விட நமது கக்ஷியின் பெயரையே அகில இந்திய இயக்கமாக்கவேண்டுமென்றும் சென்ற லார்ட் செம்ஸ் போர்டு சீர்திருத்தக் கமிஷன் முன் நாம் சாக்ஷியம் கொடுத்த காலத்தில் காங்கிரஸுடன் சேர்ந்திருக்கவில்லை என்றும் பொதுவாகக் காங்கிரஸ் பிரவேசத்தைக் கண்டித்து, பார்ப்பன புரோகித பகிஷ்காரமான சுயமரியாதை இயக்கத்திற்குச் சகலரும் ஆதரவளிக்கவேண்டுமென்றும் கூறி இருக்கிறார். இளைஞர் மகாநாட்டின் தலைவரான திருச்சி, திரு T. A. G. இரத்தினம B. A. L L B., அவர்களின அக்கிராசன உரை நமக்கு இன்னம் கிட்டவில்லை

பின் அதைப்பற்றி விவரிப்போம நமது ஆசிரியர் ஈ வெ இராமசாமி நாயக்கர் அவர்கள் தேக அசௌக்கிய மடைந்திருக்கையிலேயே இருப்பதால் மகாநாட்டைப் பற்றிய அபிப்பிராயத்தை நாம் வெளியிடுவதற்கில்லையெனினும் மகா நாட்டுப் பிரதிநிதிகளில் தங்களை அரசியல் தலைவர்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிற தனிப்பட்ட கனவான்களும் அவர்களின் சிஷ்யர்களில் சிலரும் தவிர, மற்றவர்களெல்லோரும் காங்கிரஸ் சம்பந்தமானது தேசத்திற்கும் சிறப்பாகப்பார்ப்பனரல்லாதாருக்கும் கெடுதி என்றே நினைக்கிறார்கள். ஆயினும் நம்முள் பிரிவினையில்லாதிருப்பதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யலாம் என்ற ஆவலுடனிருக்கிறதாக உணருகிறோம். ஜஸ்டிஸ் கட்சியை சில அரசியல் தலைவர்கள் தங்களுடைய நன்மைக்கு உபயோகப்படுத்திக்கொள்ள இந்த சூழ்ச்சியா? என்ற ஐயமுள்ளவர்களும், ஜஸ்டிஸ், காங்கிரஸ் இரு கட்சிகளையும் அதன் இஷ்டம்போல் விட்டு விட்டுச் சமுதாய முற்போக்கிற்கென்று சுயமரியாதை இயக்கத்தை தனியாக ஏற்படுத்தலாமா? என்ற எண்ணமுள்ளவர்களும் இருக்கிறார்களென அறிகிறோம் எப்படியானாலும் சரி மகாநாட்டில் பொது உணர்ச்சியும் முன்னேற்றத்திற்கு கெம்பீரமான தோற்றத்துடன் கூடிய ஆசையும் தான் தாண்டவமாடிக்கொண்டிருக்கிறது. நாயக்கரை பொறுத்தவரையில் எந்த விஷயத்தையும் வலியுறுத்தப்போவதில்லையென்றும் காங்கிரசின் பொறுப்பையோ; ஜஸ்டிஸ் கட்சியின் பொறுப்பையோ தான் மேல் எடுத்துப்போட்டுக் கொள்ளப் போவதில்லை என்றும் எவருடைய முயற்சிக்கும் தாம முட்டுக்கட்டையாக இருக்கப் போவதில்லை என்றும் முன்னமேயே தெரிவித்து விட்டதாக அறிகிறோம். டாக்டர்கள் கண்டிப்பாய் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்தியிருப்பதால் மகாநாட்டின் நடவடிக்கைகளில் அதிகப் பங்கெடுத்துக்கொள்ள முடியவில்லை.

சிறப்புற்ற நமது ஜில்லாவின் தலைநகரான கோவையம்பதிமகாநாட்டிற்கு விஜயஞ்செய்துள்ள மாகாணபார்ப்பனரல்லாதார்களை மீண்டும் நல்வரவேற்கிறோம். தங்களின் மகத்தான கடமையையும பொறுப்பையும் உணர்ந்து மகாநாட்டை பொதுநல நோக்கத்துடன் பொறுப்பெடுத்து வெற்றிபெறுமாறு இனிது நிறைவேற்றுவார்களென்று நம்புகிறோம்.

சுவாமி சண்முகானந்தர் பிரிந்தார்.

சென்ற செவ்வாயன்று சென்னை வண்ணாரப்பேட்டையிலுள்ள யோகீஸ்வரானந்த நிலையத்தில் சண்முகானந்த சுவாமிகள் தமது ஸ்தூல உடலைவிட்டுப்பிரிந்து தம் ஹிருதயங்களில் சதா குடிகொண்டிருக்கச் செய்துவந்த இறைவனடி சேர்ந்தார் என்றறிகிறோம். சுவாமிகளைப்பற்றி நாம் அதிகம் கூற வேண்டுவதில்லை. சுவாமிகளின் பிரிவால் தமிழ்நாட்டிற்கேற்பட்ட நஷ்டம் மகத்தானதாகும். பார்ப்பனீயக்கொட்டத்தையடக்கவந்த சுயமரியாதை வீரர்களுள் ஒருவர் பிரிந்தார், சித்தவைத்தியத் தநாட்டிடை புத்துயிருடன் எழச்செய்து வந்த ஓர் பெரியார் குறைந்தார். நாட்டின் சகல மக்களும்சுவாமிகளின் பிரிவால் மனம் வருந்தாதிரார். சுவாமிகளின் சிஷ்யர்களுக்கு நமது அனுதாபத்தை அறிவித்துக்கொள்ளுகிறோம தம் குருவின் அடிச்சுவட்டைப்பின் பற்றுவார்களாக சுவாமியின் ஆன்மா சாந்தி அடைவதாக.

இதைக் கூடிய சீக்கிரத்தில் களைந்தெறியவேண்டுமென்றே நமது புனிதமான இயக்கம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. நமதியக்கத்தின் அரசியல் கொள்கைகளை வாக்காளர்களே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். சென்ற தேர்தலில் நமக்கு ஏற்பட்ட தோல்விகளிலிருந்து வாக்காளர்கள் நம்மீது கொண்டிருந்த அபிப்பிராயத்தை மாற்றி விட்டார்களென்று சொல்ல முடியாது. நாம் ஆறு வருடகாலம் உத்தியோகத்திலிருந்தோம். இனியும் அவ்வுத்தியோகங்கள் நாமே தான் வகிப்போம் என்ற ஸ்திரமான குருட்டு நம்பிக்கையுடன் வாக்காளர்களை மறந்திருந்தனர். நமது எதிரிகள் இதை ஒரு காரணமாக வைத்துக்கொண்டு குறும்புத்தனமாக நம்மைத் தூர எடுத்துச் சொன்னார்கள். ஒரு மனிதனை அவன் நிலைமையிலிருந்தும், அந்தஸ்திலிருந்தும் தெரிந்து கொள்வது மனித சுபாவமல்ல. ஆனால் பிறருடன் ஒத்திட்டுப்பார்த்தபின் தெரிந்துகொள்வதே சுபாவம். அதனால் மனித சுபாவமும் ஒரு மாறுதலை வேண்டுகிறது. நாம் எதிரிகளுடன் ஒத்திட்டுப் பார்க்கப்பட வேண்டுமென்று விரும்பினோம். ஆனால் நமது எதிரிகளுக்குப் பதவிபெற்று அரசாங்கத்தை நடத்தப் போகிய தைரியமில்லை. அவர்களுள் குறும்புத்தனமான பிரசாரம் செய்தும் சட்டசபையில் ஒழுங்கு முறைகளையுடைய கட்சியார்களைவிட சுயராஜ்யக்கக்ஷியார் குறைந்தே யிருக்கின்றனர். சுயராஜ்யக்கக்ஷியார் இரட்டை ஆட்சியைத் தகர்க்க தெரிகிறவர்களாம். ஆனால் அவர்கள் தான் அரசாங்கத்தாரிடமும், மாற்றப்படாத பத்திரிகையினரிடமும் செல்வாக்குச் செலுத்தும் போலிய வர்களாயிருக்கிறார்கள். சமீபத்தில் நமக்கேற்பட்ட தோல்விகள் பார்ப்பனரல்லாதாரை விழிக்கச்செய்து அவர்களின் பொறுப்பை மென்மேலும் உணர்த்தியிருக்கிறது.

முடிவாக நாம் இரட்டை ஆட்சியை அகமாக விரும்பவில்லை. அதன் குறைகள் இன்னதென்பதை பூர்ணமாய் உணர்ந்தே இரட்டை ஆட்சியை நடத்த முன்வந்தோம். நம்முடைய ஆறு வருட அனுபவத்தில் இன்னுமுள்ள குறைகளைத் தெரிந்து கொண்டோம். அதை இப்போது கண்டிக்க முடியாது. தெரிந்தெடுக்கப்பட்ட கமிஷன் வரும்பொழுது சந்தர்ப்பமேற்பட்டால் அப்போது நமது அபிப்பிராயத்தைத் தெரிவிப்போம். தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தின் கொள்கை பாமர மக்களை சமுதாய வியலிலும், ஆசாரச் சீர்திருத்தத்திலும் முன்னேற்றச் செய்வதோடு மட்டும் நிற்காது பொது ஜன வாழ்க்கையில் ஒரு ஒழுங்கையும், பரிசுத்தத் தன்மையையும் புகட்டவல்லது. நம் கைமேலேயே நாம் கவனிக்கவேண்டிய வேலைகள் அநேகமிருக்கும்போது நமது கட்சியின் நோக்கங்கள் பிறிதொரு மார்க்கத்தில் ஈடுபட்டிருக்கிறது. காங்கிரஸ் பிரவேசத்தால் ஒரு பயனும் ஏற்படாது என்ற பூர்ண நம்பிக்கை எனக்குண்டாகையால், காங்கிரஸ் பிரவேசத்தைக் குறித்த தீர்மானம் மகா நாட்டில வரும்பொழுது அதை தோல்வியுறச்செய்யுமாறு நம் கட்சியினரை வேண்டிக் கொள்ளுகிறேன். மஹா நாட்டில் காங்கிரஸ் பிரவேசம் ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்டால் என்போலொத்தவர்கள் நலவுரிமைச் சங்கத்தினின்றும் ஒரு சமயம் அரசியலின்றும் விலகிவிடுவது தான் உத்தமம். எனவே தங்கள் தங்கள் வேலையைக் கவனிப்பதால் பின்னால் தக்க பலனை அடையலாம். கடைசியாக அரசியல் என்பது ஜால வித்தையேயல்லாது வேறல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பார்ப்பனரல்லாதார் சென்னை மகாண விசேஷ மகாநாடு, கோயமுத்தூர்.

அறிக்கை.

மகாநாட்டுத்தலைவர் கனம் திவான் பஹதூர் எஸ். குமாரசாமி ரெட்டியார் அவர்களும் பி. முனிசாமி நாயுடுகாருவும், கனம் ராவ் பஹதூர் சி. எஸ். ரத்தினசபாபதி முதலியார் அவர்கள் வீட்டில் தங்குகிறார்கள். ஸ்ரீமான் ஜெ. எஸ். கண்ணப்பர் ராஜ வீதி செய்மண்டி கிருஷ்ண சாமிபிள்ளை அவர்கள் மண்டியில் கனம் பனகால் தங்குகிறார். ராஜா, வெங்கிட்டகிரிகுமாரராஜா, மிர்ஜாபூர்ஜமீன்தார், ஸர் பாத்ரோ, ஏ. இராமசாமி முதலியார், முதலியவர்கள் திருச்சிரோட்டில் கனம் திவான் பஹதூர் பி. சோமசுந்தரம் செட்டியார் அவர்களுடைய "சோமவிலாசம்" பங்களாவில் தங்குகிறார்கள். டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு, கனம் பி.டி. ராஜன், சௌந்திரபாண்டிய நாடார், பி. ரத்னவேலுத்தேவர், உ. வி. கல்யாணசுந்தர முதலியார், இன்னும் மற்ற கனவான்கள் கனம் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்களுடைய "ஹாவார்டன்" பங்களாவில் தங்குகிறார்கள்: கனம் திவான் பஹதூர் எம். கிருஷ்ணநாயர் அவர்கள், உடையார்வீதியில் கனம் எஸ். பீமைய செட்டியார் அவர்களுடைய வீட்டில் தங்குகிறார். மதுரை கனம் எம். டி. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் ராஜவீதியில் கனம் பி. வெங்கிடாசல முதலியார் அவர்கள் வீட்டில் தங்குகிறார். கனம் திவான் பஹதூர் ஓ. தணிகாசலம் செட்டியார் அவர்கள் ராவ்பகதூர் டி. வரதராஜுலு நாயுடுகாரவர்கள் ஜெயில் ரோட்டில், இஞ்சினீயர் ராஜகோபால்சாமி நாயுடு அவர்கள்வீட்டில் தங்குகிறார். ஜனாப் டி. எம். மொயிது சாஹிப், பஹதூர் முதலிய மகமதிய டெலிகேட்டுகள் ஜனாப் கௌத்காய் ஆமது பாக்குட்டி சாஹிப் அவர்கள் வீட்டில் தங்குகிறார்கள்.

டெலிகேட்டுகளினுடைய ஜில்லாவின் பெயர்	தங்குமிடம்	போஜனசாலை
தஞ்சாவூர், மதுரை	ஒப்பணக்காரத்தெருவு முனிசிபல் எலிமெண்டரி பாடசாலை	ஒப்பணக்காரத்தெரு முனிசிபல் எ. பாடசாலை.
நெல்லூர்	ஒப்பணக்காரத்தெரு கனம் வக்கீல் சி எஸ் ராஜரத்தின முதலியார் அவர்கள் ஆபீஸ்	டை
சென்னை (தொழிலாள சங்கத்தார்)	பிரம்ம சமாஜ் பெண்பாடசாலை	டை
திருச்சிணப்பள்ளி	ஒப்பணக்காரத் தெருவு கனம் சுப்பிரமணிய செட்டியார் அவர்கள் வீடு	உப்பிலிபாளையம் ராமசாமி செட்டியார் சத்திரம்
திருநெல்வேலி, ராமனாதபுரம்	ஒப்பணக்காரத்தெரு கனம் அ கந்தசாமி செட்டியார் அவர்கள் வீடு	டை
திருநெல்வேலி, ராமநாதபுரம்	ஒப்பணக்காரத்தெரு கனம் என் கோனைய செட்டியார் அவர்கள் வீடு	டை
சேலம்	லண்டன் மிஷன் எலிமெண்டரி பாடசாலை	டை
ஆந்த்ர தேசம்	கனம் வி அருணாசலம் செட்டியார் அவர்கள் வீடு	டை
டை	கனம் ஆர் கே ஷண்முகம் செட்டியார் அவர்களின் பூர்ராஷாப்கடை மெத்தை	டை
கோயமுத்தூர்	துரையர் வீதி முனிசிபல் பாடசாலை	டை
வட ஆற்காடு, தென் ஆற்காடு	வைசியாள் வீதி கனம் ராவ் பகதூர் சி எஸ் ரத்தின சபாபதி முதலியார் அவர்கள் வீடு	வைசியாள் வீதி கனம் ராவ்பகதூர் சி எஸ் ரத்தினசபாபதி முதலியார் அவர்கள் வீடு
மதராஸ், செங்கல்பட்டு ஜில்லா	வைசியாள் வீதி கனம் டி கிருஷ்ண செட்டியார் அவர்கள் வீடு	டை

காங்கிரஸ் பிரவேசம்.

ஜஸ்டிஸ் கக்ஷி பிரமுகரொருவர் எழுதுகிறார்.

சமீபத்தில் பம்பாயில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியார் நடந்து கொண்ட மாதிரி அவர்களுக்கிடையே ஒரு பரபரப்பை ஏற்படுத்தியிருப்பதுடன் வெளியிலிருப்பவர்களிடையும் ஒரு பரபரப்பை உண்டாக்கியிருக்கிறது. அதற்குப் பின் ஏற்பட்ட விசித்திரமான விவாதங்களும் சச்சரவுகளும் காங்கிரசின் தற்போதைய யோக்கியதையை வெளியாக்கி விட்டது. நமது மகாநாட்டைப் பொறுத்தமட்டிலும் நாம் எதிர்பார்த்தவண்ணமே சம்பவங்கள் நடந்தேறின. ஸ்ரீமான்கள் ஆர். கே. ஷண்முகம் செட்டியாரும், பி. வரதராஜுலு நாயுடுவும் அவர்கள் சகாக்களும் பார்ப்பனரல்லாதாரை, அதாவது நலவுரிமைச்சங்கத்தாரையே காங்கிரசில் சேர்ந்து, காங்கிரஸ் தற்போது அகப்பட்டிருக்கும் வகுப்பினரிடமிருந்து மீட்கவேண்டுமெனவும் அறிக்கைகள் வெளியிட்டு வந்தனர். அவர்கள் அபிப்பிராயத்தால் பலமாற்றத்தை ஏற்படுத்த இயலாது போய் விட்டாலும் ஒரு சில நண்பர்களையாவது கவர்ந்திருப்பார்களெனத் தெரிகிறது. மதுரை மகாநாட்டிலேயே காங்கிரசில் சேருவதா என்றகேள்வி பிறந்து நீண்டநேரம் விவாதிக்கப்பட்டு கடைசியாக தனித்த நபர்கள் இஷ்டப்பட்டால் காங்கிரசில் சேரலாமென்றும், நலவுரிமைச்சங்கம் தனித்தே நிற்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. கட்சிப்பிரமுகர் சிலர் இந்தக் கேள்வியை மீண்டுமொருமுறை விவாதிக்கவேண்டுமென்ற வேண்டுகோளுக்கிணங்க, ஒரு விசேஷ மகாநாட்டைக் கூட்டுவித்த நமது கோவை நண்பர்களுக்கு எனது வந்தனத்தைச் செலுத்துகிறேன். காங்கிரஸ் பிரவேசம் வேண்டுமென்போர், தங்கள் முழு அபிப்பிராயத்தையும் சவிஸ்தாரமாகத் தெரிவித்துக் கொள்ளப் போதிய அவகாசமும், சந்தர்ப்பமும் எனது நண்பர் திவான் பகதூர் எஸ். குமாரசாமி ரெட்டியார் அவர்கள் அளிப்பாரென்று பூரணமாக நம்பியுள்ளேன். காங்கிரஸ் பிரவேசம் வேண்டுமென்போர் பலரிடம் நான் கலந்து பேசினேன். நான் அவர்களை "நீங்கள் வேண்டுமென்றால் நமது திட்டத்தையோ அல்லது கொள்கையையோ மாற்றிக்கொள்ளுங்கள். ஆனால் உங்களுக்கிந்த காங்கிரஸ் பித்து எதற்கு?" என்று வினவினதற்கு அவர்கள் "காங்கிரஸ் ஒரு அகில இந்திய இயக்கம். நமதியக்கம் ஒரு மாகாண இயக்கம் தானே" என்று பதிலிறுத்தார்கள். இத்தகைய பதில் வரக்காரணமென்னவென்று யோசித்துப் பார்த்தால் அவர்கள் காங்கிரசுக்கு நாட்டில் ஒரு செல்வாக்கு ஏற்பட்டிருக்கிறது, அந்த செல்வாக்கை பிற கட்சியார், குறிப்பாக சுயராஜ்யக் கட்சியார் உபயோகப்படுத்திக்கொள்ளுகிறார்களே! நாம் மட்டும் ஏன் அந்தச் செல்வாக்கை உபயோகப்படுத்திக்கொள்ளக்கூடாது என்றும், அதனால் என்ன குற்றம் இருக்கிறதென்றும் நினைக்கிறார்கள் போலும். இவ்வித சமாதானத்தை ஒப்புக்கொள்ள முடியவே முடியாது. ஏனெனில் இம்மார்க்கத்தைக் கைக்கொள்வது மிகவும் ஆபத்தானதாகும். இனிமேலே சொல்லுமுன் காங்கிரசைப் பற்றி சிலவார்த்தைகள் சொல்லுகிறேன். காங்கிரசை மூன்று பிரிவுகள் அதாவது 'பண்டைய காங்கிரஸ்' 'காந்திய காங்கிரஸ்,' 'காந்திக்குப் பிற்பட்ட காங்கிரஸ்,' எனப்பிரிக்கலாம்.

'பண்டைக்காங்கிரஸ்' ஒரு சிலரால் நடத்தப்பட்டு வந்த போதிலும் நடத்தியவர்கள் உண்மையான பெருந்தகைமையாளர்களாகவே இருந்தார்கள். அவர்கள் தற்கால தேசியவாதிகளைப்போல் வீண் டம்பம் பேசிக்கொண்டு வீட்டுக்கூரைகளின் மீதிருந்து தங்கள் தேசாபிமானத்தைக் காட்டியவர்களல்ல. அவர்கள் செயற்கை முறையில் காங்கிரசை நடத்திக்காட்டியவர்களாவார்கள். செயற்கை நடைமுறையிலிருந்த காங்கிரஸ் பூர்ண லக்ஷியங்களையுடைய ஒருவரான மகாத்மா காந்தியின் தலைமையின் கீழ் வந்தது. அந்தச் சமயந்தான் நாட்டின் ஒரு கோடியிலிருந்து பிறிதொரு கோடிவரையிலுள்ள பாமர மக்களிடையே ஒரு புது உணர்ச்சி எழுந்தது. மகாத்மாவின் கீழ் தேசிய புனர் ஜென்மம் எதிர்பார்க்கப்பட்டது. மதவியலில் இருக்கும் உட்பிரிவுகள் தேசிய முன்னேற்றத்திற்குத் தடைகளாயிருப்பதால் அதற்குப் பதிலாக வேறேதாவது புதிய உணர்ச்சியை ஏற்படுத்துவார் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. அவர் தலைமையின் கீழ் மதவியல் தேசியத்திலோ அல்லது வகுப்புப் பிணக்கிலோ சம்பந்தப்படாது தனித்த நபர்களின் லக்ஷியமாயிருந்திருக்கும் இவ்வழியில் தன் காலத்தைக் கடத்தியிருப்பாரேயாகில் மகாத்மா தேசத்திற்கு என்றும் மறையாத ஒரு பெரிய தொண்டாற்றியவராயிருப்பார். அவர் கிலாபத்துக்களித்த உபதேசமொழிகள் பரஸ்பர சம்பந்தத்தை பேதில் காட்டுகிறதேயல்லாமல் தனிப்பட்ட அபிப்பிராயமாயில்லை. காந்திக்குப்பிற்பட்ட காங்கிரஸைப்பற்றி காங்கிரஸ்காரரே போதிய அளவு சொல்லி விட்டார்களாகையால் நான் அதைப்பற்றி சொல்லவேண்டிய பிரமேயமேயில்லை. காங்கிரஸ் தன்னுடைய லக்ஷியங்களை பூரணமாய் பம்பாயில் சொல்லிவிட்டதென்றே சொல்லலாம். அத்தகைய யோக்கியதையுடைய ஒரு ஸ்தாபனத்தில் நம்மைச் சேரும்படி நமது நண்பர்கள் வற்புறுத்துகிறார்கள்.

நமது நண்பர்கள் சொல்வதை ஒத்துக்கொள்ளத் தடைகள் பலவுள, முதலாவது நமது நலவுரிமைச் சங்கம் தனது தனிப்பட்ட ஹோதாவை இழக்கவேண்டும். நாம் காங்கிரசில் சேர்ந்த மறுநிமிடமே நாம் காங்கிரசின் செல்வாக்கை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அப்படிச் செய்வதால் நாம் நமது சங்கத்துக்குச் செய்து கொண்ட பிரதிக்ஞை என்னவாவது? இவை அனைத்தையும் ரகசியமாய் வைத்திருந்தால் பிற்பாடு இரு தொகுதியினருக்கும் பங்கம் விளைவிக்கத்தான் செய்யும். தற்கால அரசியல் உலகின் லக்ஷியத்திற்காக நமது நேர்மையை இழப்பதா? நேர்மையான முறை கடைசியில் ஸ்திரமான பலனை அளிக்கும் என்பதில் சற்றும் ஐயமில்லை.

இரண்டாவதாக நமது காங்கிரஸ் சபை ஐரோப்பாவின் குடியரசு நாட்டிலுள்ள காங்கிரசைப் போலொத்ததல்ல. சீர்திருத்தங்களுக்கு முன்னர் காங்கிரஸ் ஒழுங்கு படைத்ததாகவும், திடமான கொள்கையுடையதாகவும், பாமர மக்களின் அபிப்பிராயம் இன்னதென்பதை வெளிப்படுத்துவதாகவும் அரசாங்கத்தாரையும் அவர்களை ஆதரிப்போர்களையும் எதிர்க்கும் முறையில் அமைக்கப்பட்டிருந்தது. காலமும் விஷயங்களும் இப்போது மாற்றப்பட்டு விட்டது. காங்கிரஸ் தற்போது ஒரு மிருகசாலையைப் போல அநேகமாறுபட்ட அபிப்பிராயக்காரர்களைக் கொண்டதாகவும் ஒழுங்கீனமும், நேர்மைத்தன்மையும் மறைந்துள்ளதாகவும் காணப்படுகிறது. காங்கிரஸ் தனக்குச் செல்வாக்கு இருந்த காலத்தில் தான் செய்ய வேண்டியவற்றைச் செய்து விட்டது. ஆனால் இப்பொழுதோ எப்படி நாம் ஏக குடும்பம் ஜாதி வேற்றுமை ஆகியவைகளை புராதீனமானது என்கிறோமோ அதைப்போலவே காங்கிரசும் ஒரு புராதன பண்டைய ஸ்தாபனம் என்று தான் சொல்லிக் கொள்ளவேண்டும். கடைசியாக சீர்திருத்தங்களுக்கு பின் நடந்த முதல் பொதுத் தேர்தலின் போது மகாத்மா தன் உன்னத நிலைமையும், ஒத்துழையாத் திட்டமும் ஒப்பற்ற நிலைமையை யடைந்திருந்தது. அது சமயம் ஸ்ரீமான்கள் ஈ. வெ. ராமசாமி நாயக்கர், ஆரியா, கலியாண சுந்தர முதலியார், வரதராஜுலு நாயுடு ஆகியவர்களைப் போலொத்தவர்கள் தீவிரப் பிரசாரகர்களாயிருந்தார்கள். ஆனால் தமிழ் மக்களோ தங்கள் திடமான பகுத்தறிவைக் கொண்டு காங்கிரசின்பால் உறுதியான விரோதம் கொண்டிருந்தனர். அப்பொழுதிருந்த உறுதியை மாற்றவேண்டிய அவசியம் ஒன்றுமேற்படவில்லை. காங்கிரஸ் அங்கத்தினர் என்று சொல்லிக்கொள்வது பெருமை என்பதாகவும்; ஒவ்வொருவரின் கடமை என்பதாகவும் சொல்லிக்கொண்ட காலமுண்டு. ஆனால் இப்பொழுது அதற்கெதிரிடையாகத் தானிருக்கிறது. நாம் காங்கிரசில் சேருவதென்றால் நாம் அவர்களுடைய சதியாலோசனை, வஞ்சகச் சூழ்ச்சி இதுகளில் உடன்பட்டவர்களாகவேண்டும். இதை ஒருவராவது கிஞ்சிற்றேனும் விரும்பமாட்டார், காங்கிரசைக் கைப்பற்றுவதென்றால் அது முடியாத காரியம். இதையேதான் தங்கள் அநுபவசாக்ஷியால் உணர்ந்த ஸ்ரீமான்கள் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் ஆரியா, வ. உ. சிதம்பரம் பிள்ளை இன்னும் மற்றையவர்களும் சொல்லியிருக்கிறார்கள். சிலர் இதை நம்பமாட்டார்கள்: ஆனால் அப்படிப்பட்ட நம்பிக்கையில்லாத தன்மையைக்கொண்டு ஒரு காரியத்தைச் செய்வது உபயோகமற்றதாகும். இப்படி செய்வதால் நாம் மனிதர்களையும், விஷயங்களையும் சரியாய் உணர்ந்துகொள்ளமுடியாது. நமது எதிரிகள் நம்மைப் பற்றி தவறாக வெளிப்படுத்துகிறார்களென்றால் காங்கிரசில் நாம் புகுந்த பிறகு அப்படிச்செய்ய மாட்டார்கள் என்பதற்கென்ன நிச்சயம்? எப்போதும் எல்லோரையுமே ஆசைவார்த்தை காட்டி ஏமாற்ற முடிந்தாலும், நம்மைப்படைத்த ஈசனை அவ்வாறு செய்ய ஒருபோதிலும் முடியாது. உண்மை ஒரு காலத்தில் வெளிப்பட்டே தீரும். இதற்காக நமது நலவுரிமைச் சங்கத்திலுள்ள சில பிரபல அங்கத்தினர்கள் காங்கிரசில் சேர்ந்து அகில இந்திய பொது மக்களுக்கு நம் இயக்கம் செய்து வரும் வேலையை வெளியிட்டு வந்தால் போதுமானது. பார்ப்பன பார்ப்பனரல்லாதாருக்குள்ளிருக்கும் சண்டை சமுதாயவியலையும், பொருளாதார நிலைமையைப்பற்றியே அல்லாது அரசியல் சம்பந்தப்பட்டதன்று காங்கிரசினாலும் இச்சண்டையைத் தொலைக்க முடியாது. ஆனால் இச்சண்டையை பார்ப்பனரல்லாதார் பெரும்பாலும் சமுதாயவியலிலும், ஆசாரச் சீர்திருத்தத்திலும் முன்னடைந்தாலன்றி களைந்தெரிய முடியாது.

அவர்களுடைய நன்மையில் ஈடுபட்டு உழைப்பவர்கள் என்ற உண்மை அவர்கள் மனதில் பிறக்கவேண்டும். குடியானவர்கள் கூலியாளர்கள் ஆகிய இவர்கள் விஷயத்தில் கொஞ்சமும் அனுதாபமில்லாமல் ஏதோ வாய்க்கு வந்தபடி பிதற்றிக்கொண்டு வருகிற சுயநல வஞ்சகர்கள் சொல்லும் கபட வார்த்தைகளில் ஏமாந்து போகாதபடி கிராமவாசிகளுக்கு அறிவு ஊட்டவேண்டும்.

தீண்டாமை.

“தீண்டாமைதான் நமது நாட்டுக்குப் பெரியகேடு” என்று நமது சுயராஜ்ய தேசபக்தர்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அந்தக் கேட்டை நீக்க எள்ளளவேனும் அவர்கள் பிரயத்தனம் செய்ததுண்டா? நமது தீண்டாத ஜாதியார் தெருவுக்குள் வரக்கூடாதென்று தடுக்கிற அக்கிரகாரங்கள் தென் இந்தியாவில் எத்தனையோ இருக்கின்றன. அன்புக்கும் தியாகத்துக்குமாகவே அவதரித்ததுபோல, சொல்லிக்கொள்கிற இந்த சுயராஜ்யப் பார்ப்பனர் யாராவது அந்த அக்கிரகாரத்துக்காவது போய் “ஆதிதிராவிடர்கள் நம்முடைய நாட்டுப்பங்காளிகள் நம்மைப்போலவே இந்திய மாதாவயிற்றிற் பிறந்தவர்கள் நமக்கு எவ்வளவு உரிமையுண்டோ அவ்வளவு அவர்களுக்கும் உண்டு. நம்முடைய தெருவில் அவர்களை வரவொட்டாமல் தடுத்தல் அது கடவுளுக்கு விரோதமாகவும் தேசத்திற்கு விரோதமாகவும் செய்த பாதகமாகும்’ என்று அவர்களுடைய பார்ப்பன சகோதரர்களுக்கு உபதேசித்ததுண்டா? ஆனால் நாம் இது சம்பந்தமாகச் செய்யவேண்டும் வேலையை இப்போதிருப்பதைவிடத் திருத்தமான முறையில் ஒழுங்குபடுத்திப் பலப்படுத்தவேண்டும். காங்கரஸ் தலைவராகிய ஸ்ரீமான் ஐயங்கார் “சுயராஜ்யத்தியத்திற்கு தீண்டாமை ஒரு பெருந்தடை அல்ல” என்று சொல்லியிருக்கிறார். ஆனால் காந்தியடிகள் சொல்லியிருப்பதைக் கேளுங்கள் “சுயராஜ்யத்திற்குத் தீண்டாமை ஒரு பெருந்தடையே. இந்து முகமதிய ஒற்றுமை சித்திப்பது சுயராஜ்யம் அடைவதற்கு எவ்வளவு இன்றியமையாததோ அவ்வளவு இன்றியமையாதது தீண்டாமையொழித்தலும்” என்கிறார். வைக்கத்தில் சத்தியாக்கிரகம் செய்த வீரர்கள் வழிகாட்டியபடி ஒரே உறுதியில் நின்று போர்புரிந்து தாழ்த்தப்பட்டுள்ள லக்ஷக்கணக்கான நமது சகோதரர்களை விடுவித்து அவர்களை அவர்களுடைய உரிமைக்கு ஆளாக்குவோமாக.

கதர்.

ஒரு மதத்திற்குப் புதிதாக வந்தவர்கள் அதிகமாக மதப்பற்று காட்டுவது இயல்பு. ஆனால் நாம் அவ்வளவு ஆத்திரம் கதர் விஷயத்தில் இன்னும் காட்டவில்லை. கதர் பிரசாரத்திற்கு பொறுப்புள்ள “அகில இந்திய நூல் நூற்கும் சங்கம்” அரசியல் சம்பந்தமில்லாத ஒரு கூட்டமாயிருப்பதால் இப்போது கதர் விஷயம் அரசியல் கட்சிகளுக்குப் புறம்பாய் நிற்கிறது. நாமிருக்கும் பொருளாதார தரித்திர நிலையில் கதர் நூற்பும் கதராடை தரிப்பதும் பெருவா[illegible] [illegible]திக்கு ஒத்ததென்றே நாம் ஐயமறக்கொள்ளவேண்டும்.

மதுவிலக்கு

குடியை அறவே ஒழிப்பதுதான் நமது குறிக்கோள். அதற்காகச் சட்டசபைக்கு உள்ளும் புறமும் எவ்வளவு வற்புறுத்திப் பேசவேண்டுமோ அப்படிப்பேசி துரைத்தனத்தாரை இணங்கச் செய்யவேண்டும். அதோடு மதுபானஞ் செய்துவரும் இனத்தாருக்குள் அது மிக்க வெறுக்கத்தக்கது என்ற உணர்ச்சியை எழுப்பிப் பரவச்செய்யவேண்டும். இது நம் குறிக்கோளைச் சீக்கிரத்தில் அடைவதற்கு அவசியமான ஏற்பாடு.

உத்தியோகப் பதவிகள்

துரைத்தன உத்தியோகங்களிலும் ராணுவ உத்தியோகங்களிலும் இந்தியர்களை நியமித்தல்வேண்டும் என்ற விஷயமாய் ஆங்கிலேயர் நமக்குப் பல உறுதிகள் சொல்லியிருக்கும் அவைகளை நிறைவேற்றவில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இதைப்பற்றி “டாக்டர் ருதர்போர்டு” என்பவர் சமீபத்தில் வெளியிட்ட ‘தற்கால இந்தியா’ என்ற நூலில் பின்வருமாறு எழுதுகிறார் வாக்குகொடுத்தும் அவைகளை காப்பாற்றாமலிருக்கிற ஆங்கிலேய துரைத்தனத்தைத் தாங்கிப் பேசுகிறவர்கள் லீ கமிஷன் வெளியிட்ட சிபார்சுகளை தங்களுக்கு ஆதாரமாக எடுத்துப் பேசுகிறார்கள். ஆனால் சம்பளம் அதிகமாயுள்ள உயர்தர உத்தியோகப்பதவிகள் ஒன்றிரண்டு நீங்கலாக எல்லாம் இன்னும் ஆங்கிலேயருக்கே கொடுக்கப்பட்டுவருகிறது. தங்கள் சொந்த தேசத்து அரசியல் நிர்வாகத்தில் இந்தியர்களுக்கில்லை. அதற்குக் காரணம் அவர்கள் ஆங்கிலேயராயில்லை என்பதுதான்” இப்படி இந்தியர்களை பக்ஷபாதமாக நடத்துவதற்கும் அநீதமாக அரசியல் நிர்வாகத்தில் அவர்களுக்கு இடங்கொடாததற்கும் காரணம் இந்தியர்களுக்கு நிர்வாக ஆற்றலில்லை ஆங்கிலேயருக்குத்தான் இருக்கிறதென்று ஒரு சாக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் ஆங்கிலேயருடைய நிர்வாக ஆற்றலெல்லாம் இந்தியாவின் இரத்தத்தை உறிஞ்சுவதில்தான். இப்படி உறிஞ்சுவதில் ஆங்கிலேயரைப்போல் சமர்த்தர் யாருமேயில்லை. இந்தியாவின் வறுமைக்கெல்லாம் இதுவே முக்கிய காரணம். இந்த நிர்வாக ஆற்றல் என்னும் பூச்சி என்று ஒழிகிறதோ அன்றுதான் இந்தியாவுக்கு எல்லாவிதத்திலும் க்ஷேமம் என்று எழுதுகிறார்.

சமீபத்தில் நடந்த தஞ்சை ஜில்லா பார்ப்பனரல்லாதார் மகாநாட்டின் தலைவர் ஸ்ரீமான் திவான்பகதூர் கிருஷ்ணநாயர் அவர்கள் சொன்னது நம் ஞாபகத்திற்கு வருகிறது. “நம் நாட்டில் உத்தியோகம் வேண்டும். உத்தியோகம் வேண்டும் என்று கதறுவதில் ஐரோப்பியரே முதல், கல்கத்தாவிலுள்ள ஐரோப்பிய சங்கத்து அங்கத்தினர் தங்களுடைய உற்றார் உறவினருக்கு உத்தியோகங்கள் தேடிக்கொடுக்க என்றும் பதிபோட்ட வண்ணமாயிருக்கிறார்கள்” என்று சொன்னார் நமது தலைவர் கிருஷ்ணன்நாயர் அவர்கள் இப்படிச் சொன்னதற்கு மகாராஸ்மெயில் பத்திரிகை “வேலை பார்க்கும் ஆற்றலைக் கவனிக்காது ஐரோப்பியர் உத்தியோகத்தை நாடுகின்றார்களா?” என்று பதில் கேள்வி கேட்டது. இந்தக் கேள்விக்கு உத்திரம் மேற்குறித்த ஆங்கில ஆசிரியரே சொல்லிவிட்டார் “அரசியல் நிர்வாகத்தில் இந்தியர்களுக்கு இடங்கொடாததற்கு அவர்கள் ஆங்கிலேயராய் இல்லாததுதான் காரணம்’ என்றார். பாசாங்குகளெல்லாம் ஒழித்துவிட்டுப் பேசுகிறதென்றால், எல்லோருமே பதவி வேட்டையாளர்கள் தான, இந்த வேட்டையில் நம்மைவிட நம்மைத் தூற்றுபவர்களுக்குத்தான் அதிக நாட்டம். அதினால் இதை ஒப்புக்கொள்வதில் கூசவே வேண்டாம். நேர்வழியிலில்லாமல் கள்ள வழிகளில் உத்தியோக பதவிகளைக் கொள்ளையடிக்கப் பார்க்கிற ஆஷாடபூதிகள் உத்தியோகப் பதவிகளை இகழ்ந்ததுபோல் சீ சீ என்று சொல்லுகிற கபட வார்த்தைகளில் நம்மவர் ஏமாந்து போகவேண்டாம்.

உத்தியோகப் பதவிகளில் ஐரோப்பியர்களிருக்கிற இடத்தில் இந்தியர்கள் இருக்கவேண்டுமென்பதற்கு டாக்டர் ருதர்போர்ட் சொல்லும் நியாயங்களே பார்ப்பனர் இருக்கிற இடத்தில் பார்ப்பனர் அல்லாதார் இருக்கவேண்டும் என்பதை நன்கு வலியுறுத்துகிறது. அவர் சொன்னமுறையில் சொல்லுகிறதென்றால் “பார்ப்பன ‘நிர்வாக ஆற்றல’ என்னும் பூச்சி என்று ஒழிகிறதோ அன்று தான் நமக்கு எல்லாவிதத்திலும் க்ஷேமம்.” என்றுதான் சொல்லவேண்டும்.

சென்னை துரைத்தனத்தார் அவர்களை இப்போசூழ்ந்துள்ள சுற்றுப்படைகள் சொல்கிற உபதேசத்தைக் கேட்டுக் கேட்டுசொரியாதிகளெல்லாம் ஒரே வாசகில் பிராமண போஜனமாய் முடிந்துவிட்டது உயர்தர உத்தியோகப்பதவிகளுக்கு இப்போ செய்துள்ள நியமனங்கள் எதைப்பார்த்தாலும் நமது கோப ஆவேசத்தையே மூட்டுவதாயிருக்கிறது. பொதுஜன அபிப்பிராயத்தையும் நியாயத்தையும் கொஞ்சமும் பொருட்படுத்தாது மிகத்துணிவாய் பார்ப்பனரையே இன்னும் நியமித்து வருகிறார்கள். உத்தியோகஸ்தர்களை இடம் பெயர்த்து மாற்றுகிற ஏற்பாடுகளில் பார்ப்பனரல்லாதார் ஏதோ ஒருவர் இருவர் அடுத்த மேல் ஸ்தானத்திற்கு உயர்த்தப்பட்டிருக்கலாம் ஆனால் புது நியமனம் வந்தால் அது எப்படியும் பார்ப்பனருக்கே. மேலே உள்ளவர்களைப் பார்த்து கீழே உள்ள உத்தியோகஸ்தர்களும் அச்சமின்றி நீதியற்ற நியமனங்கள் செய்யத் துணிந்துவிட்டார்கள். உத்தியோகங்களில் இனவாரிசமத்துவம்ஏற்படுவதற்காக சட்டசபையில் பிறப்பித்த தீர்மானங்களெல்லாம் அமுலுக்கு வந்தபாடில்லை. பல்பொடி மடக்க உதவும் வெறுந்தாளாகத்தான் கிடக்கின்றன. இது விஷயமாய் நாம் கண்டித்துப் பேசியவெல்லாம் வீணாய்ப்போயிற்று. நாம் கண்டித்துப்பேசப்பேச அக்கிரமம் அதிகப்பட்டுக்கொண்டுதான் வருகிறது.

இவ்வாறு உத்தியோகங்களையெல்லாம் பாழாக்கிக்கொண்டு வருகிற உத்தியோக நியமன போர்டுக்குப் பதிலாக மாகாண கமிஷன் ஒன்றை ஏற்படுத்தப் போகிறார்களாம். அதற்கும் இதற்கும் வித்தியாசம் வருகிற கமிஷனால் ஏற்படப்போகும் பெரும்செலவுதான். மற்றபடி ஒன்றுமில்லை. அந்தக்கமிஷனுக்குரிய அங்கத்தினர்

முகப் ... னம பற்ற ... ... வந்திருக்கிறது. அதன்பொருள் என்ன என்று நீங்களே பார்த்துக்கொள்வீர்களாக. ஒரே இனமாயிருக்குமென்பதே பொருள்.

இந்தகமிஷன் வருவதினால் வரி கொடுப்பவர் முதுகில் இன்னும் சுமை சுமத்துவதே யன்றி வேறில்லை. குறைந்தபட்சம் வருஷா வருஷம் இதற்காக இரண்டு லட்சம் ரூபாய் கொட்டியாக வேண்டும். தென்னிந்திய பத்திரிகை ஒன்று சொல்லுகிறபடி "வருகிற கமிஷன் சிபார்சுக்காகவும் ஜாதிக்காகவும் நியமனம் செய்யாமல் திறமை ஒன்றையே பார்த்து நியமனம் செய்வார்கள் என்று துரைத்தனத்தார் எண்ணினால் அது முற்றிலும் தவறு என்று வெகு சீக்கிரத்தில் கண்டு கொள்ளுவார்கள். அகில இந்திய உத்தியோக கமிஷன் உத்தியோகங்களை எவ்வளவு சீர்திருத்தியிருக்கிறார்கள் என்பதை அறிந்துகொண்ட பிறகாவது மாகாணத்துக்கென்று ஒரு கமிஷனை ஏற்படுத்தக் கூடாதா? அதைக்கொஞ்சம் நிறுத்திவைத்தால் குடி மோசம் போய்விடுமா?" நியமனங்கள் செய்வதற்காக இது ஒரு நியமனமா? இரண்டு லட்ச ரூபாயை அதற்கு பாழாக்குவதா? இதற்கு ஆட்சேபனை இப்போதே சிறிது கிளம்பியிருக்கிறது. இன்னும் நமது ஆட்சேபனையை நன்கு வற்புறுத்தி இப்பெருங்கேட்டை முளையிலேயே கிள்ளி முடித்து விடவேண்டும்.

காங்கிரஸ் பிரவேசம்

இனி நாம கவனிக்கவேண்டிய முக்கிய விஷயம் ஒன்று. அதுவிஷயத்தில் நமக்குள்ள கவலைக்கோர் அளவில்லை. அதாவது இந்திய தேசிய காங்கிரஸ் சபையில் நமது கட்சியை சேர்த்து கொண்டு பின்னர் கூடுமானால், அதன் நிர்வாகத்தை அடக்கி ஆண்டு கொண்டிருக்கிற ஒரு இனத்தவரான சூழ்ச்சியாளரை அப்புறப்படுத்த வேண்டுமா? என்பது தான். இந்த விஷயத்தை கவனத்தோடு நாலாபக்கங்களிலிருந்தும் பார்த்து ஆராயவேண்டும். அதனால் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்களையெல்லாம் எதிர் பார்த்து அவைகளுக்குத் தக்கவாறு செய்யவேண்டிய பங்களை முன் கூட்டியே வகுக்கவேண்டும். ஜஸ்டிஸ் கட்சியினராகிய நாம் ஒரு முறையில் புகுந்தபின் முளைவைத்தகாலைப் பிரிக்க முடியாது என்பதை நீங்கள் நன்றாக ஞாபகத்தில் வைக்கவேண்டும். (காங்கிரசு பிரவேசத்துக்காகச் சொல்லப்படும் கூற்றுகளையும் விரோதமாகச் சொல்லப்படும் கூற்றுகளையும் சொல்ல தனது முடிவைச் சொல்லாமல் பிரதிநிதிகளின் அபிப்பிராயத்திற்கே விட்டு விட்டார் ஆதலால் நாம் அதை இங்கு பிரசுரிக்க வில்லை) (ப—ர்.)

காங்கிரஸ் பிரவேசத்துக்கு அனுகூலமான முகாந்திரங்களையும் மாறுன முகாந்திரங்களையும் நான் தெரிந்துகொண்ட அளவில் உங்கள் முன்னர் சமர்ப்பித்திருக்கிறேன் முடிவு அடையவேண்டிய உங்கள் வாக்கால் அதன் உ [illegible] உள்ளது. உங்கள் முடி [illegible] ஆகும். காங்கிரஸை சேருகிறதானாலும் சரி, சேராமற் போனாலும் சரி, அது அத்தனை பெரிதல்ல பெரியதோர் காரியம் ஒன்றே, அனைவரும் ஒத்த ஒழுங்குக்குக் கட்டுப்பட்டு நிற்கிற நமதுடைய கட்சியின் உறுதியையும் உபயோகத்தையும் எள்ளளவும் குறைத்து விடாதபடி நாம் சொல்லிலும் செயலிலும் இருக்கவேண்டும். நாம் என்ன முடிவுக்கு வந்தபோதிலும் ஏகோபித்தவண்ணமாக இருத்தல் வேண்டும். வந்த முடிவை ஆதரவோடும் உண்மையோடும் நிறைவேற்றிவைக்கவேண்டும் என்பதே என் வேண்டுகோள்.

முடிவுரை.

ஏமாற்றக் காலமெல்லாம் ஒழிந்து போய் விட்டது. இதற்கு முன் காலை ஒளிகள் நமக்காக உதிக்கக் காண்கிறோம். "நளின வார்த்தைகளால் நமது அரசியல் முன்னேற்றம் கைகூடா" தென்பது நாடெங்கும் தெரிந்து வருகிறது. அரசியல் உணர்ச்சி எங்கும் நல்ல முறையில் எழ ஆரம்பத்திருக்கிறது. ராமனாண்டால் என்ன, ராவணன் ஆண்டால் என்ன, எல்லாம் நமக்கு ஒன்றே என்னும் பொறுப்பற்ற உணர்ச்சி தேசத்தை விட்டு அகலுகிறது. வெற்றியாகிய கரை ஏறுவதற்கான அலை நம் முன் நின்று கரையேற வாருங்கள் என்று அழைத்துக்கொண்டு நிற்கிறது. இதுவே நல்ல தருணம். நமது படைகளையெல்லாம் ஒன்றாக்கி தேச மகாவுக்கென்றே நம்மை அர்ப்பணம் செய்து ஒரு மனதாய் போர் முனைக்குச் செல்ல இதுதான் தருணம். பின் தாங்கி வருகின்ற பெரும் படையோரான கல்வியற்ற நம் சகோதரர்களை முன்னணிக்குக் கொண்டு வரல் வேண்டும். அவர்களை இதற்காக கல்வி பகட்டவேண்டிய பெரும் பணி நம்மைப் பொறுத்திருக்கிறது. நயமற்ற பழைய மந்தத்தியான முறைகள் ஒழியவேண்டும். நமது தலைவர்கள் நாம் செய்யவேண்டுவதான பணிகளுக்குப் பார்த்து அடிப்படைபோட்டு ஒழுங்குபடுத்தி, மேலும் மேலும் ஊக்கம் காட்டி உழைத்து வரும்படி நமது சமுதாயங்களுக்கு புத்துயிர் ஊட்டவேண்டும்.

அன்பர்களே! செல்வாக்கும் அதிகாரமும் படைத்திருந்த காலத்தில் நம் பக்கம் உடனிருந்தோம் என்று சொல்வதில் பயனில்லை. செல்வத்தோடிருக்கும் நல்லகாலத்தில் எண்ணிறந்த பேர் உறவினர் என்பர். நம்முடைய கஷ்டங்களை உடனிருந்து அனுபவிக்க சித்தமாயிருக்கிறோம் என்று சொல்ல இதுவே தருணம். இடருற்ற இத்தருணம் தொடர்புடையோம் என்று சொல்லுவதே நம் சமுதாயத்துக்குச் செய்யும் உண்மைத்தொண்டாகும்.

காலாடு போழ்தில் கழி கிளைஞர், வானத்து
மேலாடும் மீனிற் பலராவர்—ஏலா
இடரொருவர் உற்றக்கால், ஈர்ங்குன்ற நாட!
தொடர்புடையோம் என்பார் சிலர்.

இப்போது நம்மை விட்டு விலகி நிற்பது நீதியேயன்று பேடித்தனம். ஆகையால் பார்ப்பனர் அல்லாத சகோதரர் எல்லோர்களும் நான் இதய பூர்வமாகச் செய்யும் விண்ணப்பம் இதுதான். வீரமும் சத்தியமும் நிறைந்த ஒரே உள்ளத்தராய் நமது நீதிக் கொடியின் கீழ் ஒருங்கு சேர்ந்து அதனைக் கம்பீரமாய் உயர்த்திக்கொண்டு நமது தேச விடுதலையாகிய ஒப்பற்ற இலட்சியத்துக்கு இறைவனருளால் வெற்றி விளங்கச் செல்வோமாக.

வடமதுரை பிராமணரல்லாத திருமணம் 24—6—27-தேதி வெள்ளிக்கிழமையன்றைய தினம் திரு. வி. நாராயணசாமி நாயுடு அவர்கள் குமாரனும் B. N. Ry. ஆடிட் ஆபிஸ் குமஸ்தாவுமான திரு. சுந்தரராஜுலு நாயுடு அவர்களுக்கு ஷை ஊர் திரு. N. அழகிருசாமி நாயுடு, திரு. கோ. அ. வெங்கிடசாமி நாயுடு, திரு வி. பி. ராமானுஜ நாயுடு திரு. வி. என். வெங்கிடசாமி நாயுடு, திரு சு. குருசாமி நாயுடு, திரு. எஸ். அழகிருசாமி நாயுடு இவர்களும் மற்றும் சுற்றுப்பக்கங்களிலுள்ள கிராமங்களிலுள்ள பெரிய மனிதர்களும் சேர்ந்து பிராமண புரோகிதர் இல்லாமல் அதிவிமரிசையாகத் திருமணம் நடத்தப்பட்டது. இனியும் சித்தூர், செங்குளத்துப்பட்டி, தம்மலதண்டு மற்றும் சுற்றுப்பக்கங்களிலுள்ள கிராமத்தார்களும் இதேமாதிரி பிராமணப்புரோகிதத்தை ஒழித்துவிடுவதாக இன்று பொதுஜனக்கூட்டமொன்று கூடி தீர்மானிக்கப்பட்டது என ஸ்ரீமான் சு. கு. குருசாமி நாயுடு எழுதுகிறார்.

நமக்கு மாறுதல் ஏன்?

இந்தியாவிலுள்ள மற்றெல்லாக் கட்சிகளைக் காட்டிலும் ஜஸ்டிஸ் கட்சி தான் தேசீயக் கொள்கைகளை அதிகமாகக் கொண்டுள்ளதென்பதே எனது நீண்ட கால அபிப்பிராயம்.

இத்தகைய பரந்த நோக்கமில்லாததும் குறுகிய நோக்கமுடையதுமான வேறெந்த ஒரு கட்சியுடனாவது ஜஸ்டிஸ் கட்சி சேருவதானது, ஆறானது கடலில் பாய வேண்டியது போய் கடலானது ஆற்றில் பாய்வதை ஒத்திருக்கிறது.

காங்கிரஸ் மக்களுக்கு ஒரு பயனும் விளையப் போவதில்லையென்று கண்ட பிறகுதான் காலஞ்சென்ற நம் தலைவர்கள் ஜஸ்டிஸ் இயக்கத்தைக் கண்டார்கள். சமய சமுதாய அரசியல் விஷயங்களில், காங்கிரசானது கடந்த ஐம்பது வருஷங்களாய்ச் செய்து முடிக்காத காரியங்களையெல்லாம் நமது ஜஸ்டிஸ் இயக்கமானது நடந்த பத்தாண்டுகளில் எவ்வளவோ முன்னேற்றத்தைச் செய்து காட்டியிருக்கிறது. அப்படியிருக்க இப்பொழுது காங்கிரசில் சேருவதால் நமயியக்கக் காத்தாக்களில் ஆணையை காங்கிரசில் எப்பொழுது சேர்ந்தோமோ அப்பொழுதே நம் கட்சியும் மறையத் தலைப்பட்டு விடுமென்று நான் பயப்படுகிறேன்.

இந்நாட்டில் உண்மையான சுயராஜ்யம் நிலவுமென்றும் ஆகிய இத்தகைய உத்தமக் கொள்கைகளையுடைய ஜஸ்டிஸ் இயக்கத்தில் வந்து சேர்ந்து கொள்ளட்டுமென்றும் நான் அபிப்பிராயப் படுகிறேன்.

எத்தகைய சீர்திருத்தம் வேண்டுமென்பதை ராயல் கமிஷனுக்கு முன்னால் வற்புறுத்துவதற்காக வேண்டி ஒரு முடிவுக்கு வரவேண்டியது அவசியம் இதைமுன்னிட்டு பல வேறு கட்சிகளிலுமுள்ள தலைவர்கள் தங்கள் சுயநலத்தை ஒழித்து பொதுக்கட்சியாகிய ஜஸ்டிஸ் கட்சியில்சேர்ந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

6ம் பக்கம் தொடர்ச்சி

ஒழுங்கு படுத்திவிட்டல்லவா புறநாட்டைத் திருத்த பவனி போகவேண்டும். சோற்றிலிருக்கிற கல்லை எடுக்கமுடியாதாம்; சொக்கநாதர் கோவில் வரிக்கல்லை எடுத்துவிடப் போகிறாராம்; என்ன விந்தை!

உடைந்துபோன சென்னை சுயராஜ்ய நீர்க்குமிழி.

சுயராஜ்யக்கட்சியாருடைய புராணத்தை இனியாராவது பாடினால் சென்ற 1926 ஆம் நவம்பர் மாதத்திய தேர்தல் ஆரம்பித்ததிலிருந்து அவர்கள் செய்துள்ள செயல்கள் தான், "மாபாதகம் புரிந்த படல"மாகும். தேர்தல் காலத்தில் இந்த அரசியல் புரட்டர்கள் ஊர் ஊராய் ஓடி ஏதோ தாங்கள் உடல், பொருள் ஆவி, இவைகளையெல்லாம் அர்ப்பணம் பண்ணுபவர்கள் போலவும் தாங்கள் சம்ஹார கர்த்தாக்கள் என்றும் முழங்கிக்கொண்டு திரிந்தார்கள். வெளிப்பகட்டான கொள்கைகளை ஆரவாரத்தோடு பிரசாரம் செய்ததினால் ஜனங்கள் ஏமாந்து போனார்கள். தங்களுக்குத் தாங்களே சுயராஜ்யக் கட்சியார் என்று நாமகரணம் சூட்டிக்கொண்டார்கள். அதில் ஒரு தந்திரம். மற்ற கட்சியாருக்கு சுயராஜ்யத்தில் நாட்டம் இல்லை என்று ஏற்படுகிறதாம். பல்லாண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட தமிழ் நாவல் ஒன்றில் உள்ள சிறு கதையை இவர்கள் செய்கை ஞாபகப்படுத்துகிறது. அந்நூலின் கதா நாயகருக்கு ஒரு மகளிருந்தாள். அவள் பெயர் கல்யாணி. அவளுக்குக் கல்யாணமாகப் பருவம் வந்தபோது அவருடைய மனைவி ஒரு வரனைத்தேடிக் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்யும்படியாக அவரைக் கேட்டாள். அதற்கு அவர் "நமது மகளே கல்யாணி, அவளுக்கு எதற்குக் கல்யாணம்?" என்று பதில் சொன்னார். அதற்கு மனைவி "உலகம் என்ன பயித்தியம் பிடித்த உலகமாயிருக்கிறது. கலியாணங்களிலெல்லாம் எவ்வளவோ சிரமம், எவ்வளவோ பணச்செலவும் ஏற்படுகிறது. இவை எல்லாம் வீண்தானே. பெண் குழந்தை பிறந்தவுடன் கல்யாணி என்று ஒவ்வொரு வீட்டிலும் பேர் இட்டுவிடக்கூடாதோ" என்று சொன்னாள். நம்முடைய சுயராஜ்ய பிணர்களுக்கும் கலியாணியின் தந்தையாருக்கும் என்ன வித்தியாசம். அவர்கள் இந்தப் பகட்டான பெயர்கொண்டு உலகத்தை எப்போதும் ஏமாற்றிக் கொண்டிருக்க இயலாது.

தங்களுடைய தேர்தல் சமயத்தில் ஜஸ்டிஸ் கட்சியாரை நிர்மூலம் செய்வதுதான் உலகத்தில் தங்களுக்கு பிரமன் விதித்த வேலையென்று அவர்கள் எப்போதாவது சொன்னதுண்டா? அப்படிச் சொல்லியிருந்தால், அவர்களுடைய இனப்பற்று நன்றாய் வெளியாயிருக்கும். மந்திரிகள் ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்தவராயிருந்தாலும் சரி வேறு கட்சியைச் சேர்ந்தவர்களானாலும் சரி முற்றிலும் பார்ப்பனராகவே இருந்தாலும் சரி அவர்களைத் தொலைப்பதற்காகவே தாங்கள் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பதாய் நடித்தார்கள். மந்திரிகளை கடித்துத் தின்றுவிடவேண்டுமென்ற ஆத்திரத்தில் யாராயிருந்தாலும் சரி என்றார்கள். யாராயிருந்தாலும் அவர்களையெல்லாம் ஒரே கவளமாய் விழுங்கி விடுவதாக ஆரவாரம் செய்தார்கள். ஜஸ்டிஸ் கட்சியார் எவ்வளவு சொல்லியென்ன. சுராஜ்யக் கட்சியாருடைய புனிதவாயிலிருந்து பிறக்கும் ஒரு வார்த்தைக்கு சமானமாகுமா? ஆனதால் அவர்களுடைய வாக்குகளையே மேற்கோளாய்க் கொள்வோம். தேர்தல் முடிந்ததும் காங்கிரஸ் தலைவர் தன்னுடைய சம்ஹார தத்துவத்தை வெளியிட்டார். அவர் சொன்னதாவது:—

சில மணி நேரத்துக்கு முன், நான் மற்றத் தலைவர்களையுங் கலந்துகொண்டு தங்களுக்கு மந்திரி, பதவி வேண்டாமென்று கவர்னர் அவர்களிடம் சொல்லிவிட்டேன். ஜஸ்டிஸ் கட்சியாருக்கு மந்திரிபதவி கொடுத்தாலும் கவலையில்லை. நாம் நாட்டிற்குச் செய்ய வேண்டிய கடமையை ஒருவித இடையூறுமின்றி நிறைவேற்றிவருவோம். எப்படியாவது மந்திரி ஆட்சியை இல்லாமல் ஆக்கிவிடுவோம் என்றெல்லாம் கவர்னர் அவர்களுக்கு மனதில் படும்படியாக எடுத்துக் கூறிவிட்டேன்" என்றார்.

காங்கிரஸ் தலைவரும் "இந்து" பத்திரிகையும் கூட இவ்வாறு கூறியது, கிடையாத வெற்றி தங்களுக்கு கிடைத்துவிட்டதென்று மெய்ம்மறந்துபோன காலம். அவர்கள் அறிவு தம் வசத்திலிருந்தால் அவர்களுடைய தேர்தல் பிரதிக்ஞைகள் விஷயத்தில் இவ்வளவு ஆவேசத்தோடு பேசியிருக்கமாட்டார்கள். ஆனால் பின் செய்யவேண்டிய புரட்டுகளையெல்லாம் முன் கூட்டி அறிந்துகொண்டு மௌனம் சாதித்திருப்பார்கள்.

காங்கிரஸ் பொதுக் காரியதரிசி ஸ்ரீமான் ரெங்கசாமி ஐயங்கார் பேசினதென்னவென்றால் "காங்கிரஸ்காரர் மந்திரிமாரைத் தங்கள் கட்சியிலிருந்து ஏற்படுத்தக்கூடாது தான். ஆனால் இதர கட்சி மந்திரிகளையும் எதிர்க்கவேண்டுமென்ற விதி மிகவும் அவசியம். இல்லையானால் ஒரு மலரணை மந்திரி கூட்டத்தை ஸ்தாபிக்கலாம் என்றல்லவா ஏற்படும். இந்த ஏமாற்றுதான் காங்கிரஸ்காரர் செய்யக்கூடாது" என்றார். (மலரணை மந்திரி என்பது நிமித்தமாத்திரத்திற்கு ஏற்படுத்தும் போலி மந்திரி.)

காங்கிரஸ் கட்சியின் உதவித் தலைவர் பிரம்மஸ்ரீ சத்தியமூர்த்தி அய்யர் அவர்களும் அச்சமயம் என்ன சொன்னார் என்றால் "ஏற்கத் தகுந்த பதவி ஏதேனுமிருந்தால் காங்கிரஸ் கட்சியார், அவைகளை ஏற்பதற்கு மலரணை ஆசாமிகளைத் தேர்ந்தெடுக்கமாட்டார்கள்." என்றார். இவ்வளவெல்லாம் வேதாந்தம் பேசிய இப்பார்ப்பன உத்தமரின் ஆதரவின் கீழ்த்தான உடக்கான ஓர் மந்திரிக்கூட்டம் ஆட்சிபுரிந்து வருகிறது. சுயராஜ்யப் பார்ப்பனர் இட்ட விலங்கில் அகப்பட்டுக் கொண்ட மந்திரிகளின் திண்டாட்டத்தைப் பாருங்கள்.

சுயராஜ்யக் கட்சியார் ஜனங்களை வஞ்சித்த மோசடியே கொடிது. அதனினும் கொடிதே அவர்கள் சிருஷ்டிசெய்த பொய் சமாதானங்கள் சட்டசபையிலுள்ள சுயராஜ்யகட்சி அங்கத்தினர் வீராவேசம் கொண்ட ஒரு சேனைபோல் வீரமுழக்கம் செய்துகொண்டு போர்முனையை நோக்கிச் சென்றார். போர் ஆரம்பிக்கும் தருணம் கண்டு "உருவினவாளை உறையில் போடு" என்று கட்டளை வந்துவிட்டது. கருணையோடு படுத்துப் பதுங்கிக் கொண்டார். இன்னும் தருணம் வாய்த்தபின் உறையிலிட்ட கத்தியை திரும்ப உருவுவார்களாம். இதுதான் சுயராஜ்யக் கட்சியாருடைய வீரம்! அவர்கள் புறங்காட்டி ஓடினதற்கு அவர்களின் சேனைத் தலைவர் கூறும் கோழைச்சமாதானத்தை அவர்கள் வாயிலாகவே கேளுங்கள். "காங்கிரசின் விருப்பபடி நடக்க வேண்டியது நம்முடைய கடமைதான். ஆனால் சுயராஜ்யத்தை அடைவதில் ஜஸ்டிஸ் கட்சி மிக்க இடையூறு செய்துள்ளது என்பதும் எல்லோரும் ஒப்புக்கொண்டதே. ஆகையால் காங்கிரஸ் விதிக்கு மாறுகாத விதத்தில் நாம் நடந்து கொள்ளவேண்டியதும் நமது கடமைதான்" என்கிறார். இதன் பொருள் அத்தலைவர்க்கே வெளிச்சம்.

அவர்களுடைய தலைவர் தேர்தல்முடிந்த உடன் சொல்லியதைக் கேளுங்கள். "ஜனங்கள் சுயராஜ்யக் கட்சியினரை அதிகமாய்த் தெரிந்தெடுத்தது ஜஸ்டிஸ் கட்சியின் மேலுள்ள விரோதம் பற்றியல்ல. காங்கிரசின் மேல் வைத்த அன்பு பற்றித்தான்" என்று சொல்லியிருக்கிறார்கள். முரணாது பேசுதல் அரசியல் வாதிகளுக்கு ஏற்பட்ட போக்கியதை அல்ல போலும்.

அரசியல் உலகத்தைவிட்டு ஓட்டவேண்டிய பேய்களா ஜஸ்டிஸ் கட்சியார்? அவர்களை ஓட்டிவிடவேண்டும் என்று நாடார் விதித்ததுண்டா? அந்தப் பேயோட்டும் புனிதர்கள் இவர்களா? மாற்றான் படைகள் பலமாய்த் தாக்கியுங்கூட ஆறுவருடம் ஒரு கட்சி நிலை நிற்குமானால் இவர்களுக்குத் தெரியாத ஓர் தத்துவம் ஒன்று அதனிடத்தில் அமைந்து கிடக்கின்றது என்று சொல்லவும் வேண்டுமா? இந்தப் போலி தேச பக்தர்கள் பின்பற்றி வருகிற கொள்கைகளைவிட ஜஸ்டிஸ் கட்சியாருடைய கொள்கைகளையே ஜனசமூகம் இன்றும் ஆதரிக்கின்றது. ஜஸ்டிஸ் மந்திரிகள் செய்துள்ள வேலை இதர தேசத்தில் வேறு எந்த மந்திரிகள் செய்த வேலைகளிலும் சிறந்தது. அவர்கள்தான் ஐரோப்பியர்கள் இருந்த உத்தியோக பதவிகளில் வேறு எவ்விடத்திலும் இல்லாதபடி இந்தியர்களை நியமித்தார்கள். இதுதான் உண்மையான தேசியத் தொண்டு. தேசிய முன்னேற்றத்துக்கு ஜாதி சமத்வம் அடிப்படையென்ற கொள்கையினால் வகுப்புவாரிப்பிரதிநிதித்துவத்திற்கும் வகுப்புவாரி நியாயத்திற்கும் அவர்கள் கட்டுப்பட்டிருக்கின்றார்கள். இதுபற்றியே சமத்துவத்திற்கு எதிரிகளான பார்ப்பனர், ஜஸ்டிஸ் கட்சியாரை "தேசத்துரோகிகள்" என்றும் பிசாசுகள் என்றும் பலவாறாக வசவுமழை பொழிகிறார்கள்.

"சென்னை காங்கிரஸ் கக்ஷியார் அரசியல் பதவிகளையும் உத்தியோக பதவிகளையும் ஒரு இனத்திற்கே ஆக்கி அதையும் நிலை

பெறச் செய்வதற்காகவே ஆகு. கருவியாக தங்களை பழமைக்குக்கொண்டார்கள் என்று பனகால் ராஜா சொல்வது உண்மைதான்" என்று வட இந்தியாவிலுள்ள ஒரு காங்கிரஸ் பத்திரிகையே சொல்ல ஆரம்பித்துவிட்டது. மேலும், சென்னை மாகாணத்தின் பொதுஜன நன்மையைப் பார்ப்பனரல்லாத மந்திரிகள் கெடுத்துவிட்டார்கள் என்று பார்ப்பனர் சொல்வது முற்றிலும் பொய் என்றும் அப்பத்திரிகை கூறுகின்றது. பார்ப்பனர் சொல்லில் இன்னும் நம்பிக்கை வைத்துக்கொண்டிருக்கிற நம்மவர் ஒரு வங்காள பத்திரிகை கண்டுகொண்ட உண்மையைக் காணமுடியவில்லையா?

இன்னொரு முறை ஜஸ்டிஸ் கட்சியார் அதிகாரத்திற்கு வந்துவிடுவார்கள் என்ற பயபீதியால்தான் தங்கள் ஒழுக்கத்தைக் கைவிட நேர்ந்ததுபோல் காங்கிரஸ் கட்சியார் சொல்லுவதெல்லாம் கட்டுக்கதையே. இந்தச்சட்டசபை உள்ளவரை உத்தியோக பதவியை ஒப்புக்கொள்ளுகிறதில்லை என்று அவர் கட்சித் தலைவர்கள் பத்திரிகை மூலமாகவும் பிரசங்க மேடைகளிலிருந்தும் சட்டசபை அரங்கிலேயும் வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால் இந்த அரிச்சந்திரர்கள் நம்மை நம்பமாட்டார்களாம். அதிலென்ன புதுமை! அவர்கள் தங்களைக்கொண்டு தானே பிறரைக்கணிக்கக்கூடும்? தேர்தல் பிரதிக்ஞைகளை மானவமானம் சிறிதுமின்றி கைவிட்ட இவர்கள் மற்றவர்கள் வேறுவிதமாய் நடப்பார்கள் என்று ஏன் எண்ணவேண்டும்?

சுயராஜ்யக்கட்சியில் சிலர் இந்தப் பொய்ப்புளுகுகளுக்கு ஆளாகவில்லை. யோக்கியதை நாடி இன்னும் அவர்கள் உள்ளத்தில் பேசிக்கொண்டிருக்கிறது. அவர்கள் இந்த மோசடிகளையெல்லாம் கண்ணுற்று தன்னலமொன்றையே கருதி நடந்து வரும் தங்கள் தலைவர்களின் சூழ்ச்சியின் கொடுமையையெல்லாம்பொறுக்கமுடியாமல் கிளம்பிவிட்டார்கள். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் முன்னும்போய் முறையிட்டார்கள். அதனால் என்ன பலனாயிற்று? குற்றவாளிகள் தப்பிப்போவதற்காக விசாரணையை அடக்கி அவர்களை தண்டிப்பதற்கு பதிலாக ஆசீர்வதித்து விட்டுவிட மானங்கெட்ட செய்கையெல்லாம், தெருவில் கோலிவிளையாடுகிற பையனுக்குங்கூடத் தெரியும். சென்னையில் கோடைகாலத்துக்குக் கூத்து ஒன்றுமில்லை. ஆகையால் மயிலாப்பூரில் எழுந்தருளியுள்ள மகாத்மாக்களின் அற்புதக்கூத்தான் புதுப்புதுக் காக்ஷியாக காட்டப்பட்டு வருகின்றன. இப்போது இதுதான் சென்னைக்கு வாய்த்த கண்காட்சி. ஒருவர் சிறந்த சர்க்கஸ் முதலாளியாய் (தலைவராய்) வருகிறார். மந்திரிகளென்ற ஆட்டுக் குட்டிகளை மூக்கஞ்சரடு போட்டுப்பிடித்துக் கொண்டிருக்கிறார். தன்மந்திர சக்தியால் வசப்படுத்தி சுயராஜ்யச்சிங்கங்களை அவைகளுக்குத்தோழனாக்கிருக்கச்செய்கிறார். இருதிறத்தார்க்கும் நன்மையுண்டு, லாபந்தான். ஆனால் தேசத்திற்கு ஏதாவது நன்மையுண்டா? இல்லை. சென்னையிலுள்ள பேர்போன ஒரு சுயராஜ்யக்கட்சி பிரமுகர்தான் இந்த உண்மையை வெளியிட்டார் வேறொருவர் வேறோர் பேர்போன சுயராஜ்யர் கூறுமோர் புதுமை சொன்னார். அதுபோலவேதனில் "சுயேச்சை கட்சியாருக்குப் பதவியும் சுயராஜ்யக் கட்சியாருக்கு வருவாயும் அதிகாரமுமே இந்நாட்டின் ஆட்சிமுறை" என்று சொன்னார்.

சுயராஜ்யப்பிடாரியை வசக்கிய கதை.

சுயராஜ்யக் கட்சியாருடைய இச்செயல்களெல்லாம் அவர்கள் கொள்கைகளுக்கு ஏற்பட்டிருக்கும் மரண அவஸ்தையின் அறிகுறிகளே.

இராட்சஸ அரசாங்கத்தாரிடமிருந்து ஒன்றும் கையேந்தி வாங்கமாட்டோமென்று வீரம் பேசிக்கொண்டு அற்ப நியமனங்களுக்கும் ஏன் மண்டிபோட்டு யாசிக்கவேண்டும்? மந்திரிகள் வீட்டு வாசலில் இராப்பகலாய்க் காத்திருந்து நியமனங்களை யாசித்தார்களென்றும் மானத்தையெல்லாம் ஒரு கவளச்சோற்றுக்கு விற்றுவிட்டார்களென்றும், ஆந்திர தேசத்து சுயராஜ்யத்தலைவர் தன் கூட்டாளிகளைப்பற்றி வெட்கப்பட்டு கூறுகிறாரே? தன்னயமேயில்லாத சுயராஜ்யத் தேசாபிமானிகள் அடடா!! நீலகிரியிலுள்ள திருப்பதி போன்ற அரிய பல க்ஷேத்திரத்திற்கு அப்போது யாத்திரைகள்தான் எத்தனை? அங்கு எழுந்தருளியிருக்கும் தேவதைகளுக்குச் செய்கிற ஆராதனைகள்தான் எத்தனை! அவர்களிடம் பிரார்த்திக்கிற வரங்கள்தான் எத்தனை? நீர்பாய்ச்சல மசோதா கமிட்டி அங்கத்தினராக ராட்சஸ 'அதிகாரிகளால்' தேர்ந்தெடுக்கப்பட்டபோது சுயராஜ்யத் தலைவர்கள் கிடையாத தவப்பேறு கிடைத்ததுபோல ஓடிய ஓட்டந்தானென்ன!

அக்காலத்தில் ஜஸ்டிஸ் மந்திரிகளைப்பற்றி கத்தியதெல்லாம் காற்றாய்ப் பறந்துபோய்விட்டது. இப்போதுள்ள மந்திரிகள் புரிந்துவரும் ஆட்சிமனிதர் இருந்து செய்யும் ஆட்சியல்ல. பூதகணம் செய்யும் ஆட்சியாகத்தானிருக்கிறது. ஸ்தல ஆட்சிக்குரிய சிறு உரிமைகளைக்கூட காலின்கீழ் வைத்துத் தேய்த்தொழிக்கப் பார்க்கிறார்கள். ஸ்தல ஆட்சிச் சங்கங்கள் ஒருமனதாய் ஏகோபித்துச்செய்யும் தீர்மானங்களை நிராகரித்து மனம்போனபோக்கெல்லாம் பைசாச தாண்டவம் ஆடுகிறார்கள். இவர்கள் பிறப்பிக்கிற உத்தரவுகளைப் போல் தேசத்தைப் பாழாக்குகிறது வேறு எதுவும் இல்லை. ஜஸ்டிஸ் மந்திரிகள் இத்தகைய உத்தரவுகள் எக்காலத்திலும் பிறப்பித்ததுண்டா? கிடையாது. அதற்கு முன்னிருந்த வெள்ளை ஆட்சியோரேனும் பிறப்பிப்பதுண்டோ? அதுவுமில்லை. இக்கொடுமைகளை எல்லாம் சுயராஜ்யகட்சியாரும் அவர்களுடைய பத்திரிகைகளும் கண்டித்து ஒரு வார்த்தை கூடச் சொல்லுகிறதில்லை,

எத்தகையார் நாம்?

சென்ற தேர்தலில் வந்த ஜஸ்டிஸ் கட்சியார் எண்ணத்தில் குறைந்தவர்தான். ஆனால் அது ஒரு தோல்வியா?

ஜஸ்டிஸ் மந்திரிமார் ஆறுவருஷகாலம் தோல்வி என்பதே இன்னதென்றறியாமல் ஆட்சிபுரிந்து வந்தனர். ஆட்டிவைப்போர் பின்னிருந்து ஆட்ட அவர்கள் ஆடவில்லை. பொம்மை ஆட்சியல்ல அவர்களது ஆட்சி நம் நாட்டிற்கு அவர்கள் செய்த அருமசெயல்களைப்பற்றி சரியானபடி கவனிக்க இப்போது உள்ளவர்களுக்கு முடியாது. இனிவரும் சரித்திரக்காரரால் தான் நன்கு கணித்து எழுதப்படும். இந்தியா தேசத்தில் நம்முடைய மந்திரிகள் மாதிரி வேறு எந்த மந்திரிகளும் பயன்பட்ட ஆட்சிபுரியவில்லை என்றும் அவர்களே மந்திரிவர்க்கத்தில் ஒப்புயர்வற்றவர்கள் என்றும் பாரபட்சமில்லாதவர்கள் இப்போதே சொல்லுகிறார்கள்.

நம்மவர்கள் ஆறு வருஷம் இடைவிடாது ஒரு சிறு தோல்வி என்று கூடயில்லாமல் ஆட்சி புரிந்து வந்தார்கள் என்பதைவிட நம்மியக்கத்துக்கு வேறு கீர்த்தி வேண்டுமா?

"பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகையினானே" என்றார் ஆன்றோரும். இனி நாம் செய்யவேண்டிய யுத்தங்களுக்குத் தக்கவாறு சைனிய பலம் தயாரித்துக் கொள்ளத்தான் இப்போது உத்தியோகத்தைவிட்டு நாம் அநுபவித்து வருகிற விட்டாற்றி.

சட்டசபை இப்போது எப்படி ஆக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சற்று நோக்குங்கள். நம்முடைய மந்திரிகளுக்குப் பின்னாக இப்போது வந்திருக்கிற மந்திரிகளைத் தான் பாருங்கள். நம்முடைய இயக்கத்துக்கு ஜீவதத்துவம் எவ்வளவு இருக்கிறதென்பது உடனே தெளிவாகும். சுயராஜ்யத் தலைவர்கள் பார்ப்பனர்கள் தான். அதினால் என்ன! வேப்பங்காயைத் தின்றதுபோல முகத்தை சுழித்தாலும் பார்ப்பனர் அல்லாரையே தேர்தலில் அபேக்ஷகராக குறிப்பிடும்படி ஏற்பட்டு விட்டது. நம்முடைய இயக்கத்துக்கு இது தான் வெற்றி. இதைவிட வெற்றிவேறென்ன இருக்கிறது?

பார்ப்பனரல்லாதார் கட்சி பழைய வீரியத்தோடு இருந்தபோதிலும் நம்மவருக்கு அதனிடத்துள்ள மோகம் ஒருவாறு சிறிது குறைய நேர்ந்தது. ஆறு வருஷம் ஒரே போக்காய் அதிகாரத்திலிருந்த எக்களிப்பில் நமக்கு யாதொரு பயமுமில்லையென்று மயங்கி எதிரிகள் நமக்கு விரோதமாய்ச் செய்துகொண்டுவந்த கபடச் செயல்களை கவனியாது உறங்கிவிட்டோம். நம்முடைய இயக்கம் எவ்வளவு நியாயமாயிருக்கிறது. எவ்வளவு சத்தியமாயிருக்கிறது என்று எண்ணி நம் தலைக்குமேல் இரகசியமாய் செய்யப்படுகிற சூழ்ச்சிகளை எட்டிப் பாராமலே இருந்து விட்டோம். அது காரணமாக நம்முடைய கட்சியின் முயற்சி கொஞ்சம் தளர்ந்து விட்டது. நம்முடைய தளர்ச்சியைப் பார்த்து எதிரிகள் விழித்துக்கொண்டார்கள். உடனே நம்மை வெளிப்படையாய் அவதூறு செய்வதற்கும் நம்மைப்பற்றி இல்லாததைச் சொல்லவும் கிளம்பிவிட்டார்கள். உலகத்திலுள்ள கேட்டுக்கெல்லாம் ஜஸ்டிஸ் கட்சியாரும் அவர்கள் மந்திரிகளும் தான் காரணம் என்கிறார்கள். மழையில்லாமல் பயிர் வாடினால் ஜஸ்டிஸ் கட்சியார் செய்த பாவத்தினால் தான் என்பார்கள். ஜனங்களில் சிறிது விபரம் தெரிந்தவர்களுக்குக்கூட இருதலை ஆட்சி இன்னதென்று தெரியாமல் துறைத்தனத்தில் மந்திரிமாருக்கு என்ன பொ

[இதன் தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க]

(3ம் பக்கத்தொடர்ச்சி)

லாம் தெரிந்துதான் திரு ரெங்கனாத முதலியார் ஜஸ்டிஸ் கட்சி இல்லாவிட்டால் நான் மந்திரி ஆகி இருக்க மாட்டேன் என்றார். வசந்தா! நான் சொல்லுவதை இனியும் கவனமாகக் கேள் திருவாளவர்கள் சர். சுப்பிரமணியய்யர், கிருஷ்ணசாமி அய்யர், சி. பி. ராமசாமி அய்யர் சர்மா எனக்குப் பேர்தெரியாமலும் இதிலெழுத இடமில்லாதிருக்கும் அநேகர்களும் காங்கிரஸ் வாதிகளல்லவா? இவர்கள் உத்தியோகமெப்படியடைந்தார்கள்? அப்பன் சொத்து மகனுக்கு என்னும் வார்சில் வந்ததா? சர்க்காருடன் சேராமலே வந்ததா? சிறிது ஆலோசித்துப்பார். இது பழையகதை. இப்பொழுதுள்ள புது காங்கிரசைப்பற்றிச் சொல்லுகிறேன். அதில் ஒற்றுமையாமைக்குப் பதிலாக ஒற்றுமைப்பையும் உலகத்திற்கு மாறாக நடந்ததாக மறைவாக நடத்தி நடிக்கும் சுயராஜ்யக்கட்சியின் காங்கிரசில் அப்படியில்லை என்று நீயும் உன் கூட்டாளிகளும் நினைக்கும் அறியாமையை என்னுடைய பிரத்திட்சப் பிரமாணம் போக்குமென நினைக்கிறேன். சுயராஜ்யக் கட்சிக்கு முதலானவரும் சுதேசமித்திரன் என்னும் பேபரால் பிராமணரல்லாதவர்களைக் கூலிகளாகச்செய்வதில் வெகு அக்கரை உடையவருமான பத்திராதிபர், திரு. ரெங்கசாமி அய்யங்கார் மகனுக்குக்கமிஷன் வாங்கிக்கொடுத்து டாக்டர் வேலையும் செய்துவைத்தாரே அந்தக்காலத்தில் அந்தவேலைக்கு வெள்ளைக்காரன் காலில்விழாமல் முடியவே முடியாது. எப்படியெனில் இவர் மகன் எம். பி. பி. எஸ் பாஸ் பண்ணினவா, அப்பொழுது பாஸ் பண்ணினவர்கட்கெல்லாம் வேலை கிடைப்பதில்லை. சண்டைக்கு யார் போய் வந்திருக்கிறார்களோ அவர்களுக்கு வேலை கொடுத்த பிற்பாடுதான் மற்றவர்கட்குக் கொடுக்கவேண்டும் என்பது சர்க்கார் உத்திரவு. இதற்காக ஏழெட்டுவருஷம் வேலை காயமாகாமலிருந்த டாக்டர்களையும் வேலையிலிருந்து நீக்கவிட்டார்கள், வேலைகாலியாக சண்டையிலிருந்து வந்த டாக்டர்களுக்கு வேலைகொடுத்து வந்தார்கள். அய்யங்கார் மகனுக்கு வேலை கிடைப்பதாகவிருந்தால் சண்டைகுப்போய்வந்தவர்கள் தீர்ந்து முன் வேலையில் காயமில்லாமல் நீக்கப்பட்டவர்கள் தீர்ந்து முன் பாஸ் பண்ணினவர்கள் தீர்ந்து அதற்குப் பிறகு அய்யங்கார் மகனுக்கு வேலை வருவதற்கு அநேக காலமாகும் கமிஷன் கொடுப்பதென்பது சண்டைக்குப்போகும் டாக்டர்களுக்கு உத்தியோகத்திற்கு எடுத்துக்கொண்டகுறி இவர்கட்கு உத்தியோகம் கொடுத்தே தீரவேண்டும் சண்டை தீர்ந்த சமயமாகவிருந்ததினால் கமிஷன் கொடுப்பதையும் நிறுத்திவிட்டார்கள். அதைச்சேர்ந்த பெரிய உத்தியோகஸ்தர்கள் நினைத்தால் அவர்கட்கு இருக்கும் தனிப்பொருப்பின் பேரிலுள்ள அதிகாரப்பிரகாரம் கமிஷன் கொடுக்கலாம். அந்த அதிகாரத்தைக்கொண்டு சேனதிபதியோ சர்ஜன் ஜெனரலோ நேராக கவர்ன்மெண்டோ அய்யங்கார் மகனுக்குக் கமிஷன்கொடுத்து டாக்டர் உத்தியோகமும் கொடுத்தார்கள். அந்தச்சமயம் இந்த உத்தியோகம் கிடைப்பதற்கு கவர்மெண்டு தயவுமட்டும் போராது, அந்த உத்தியோகத்தைக் கொடுக்கும் அதிகாரியுடைய தனித்தயவும் வேணடும். ஒருவருக்கும் சம்பத்திற்கும் சந்தர்ப்பமில்லாததைச்செய்ய ஒருபெரிய அதிகாரி உடன்படவேண்டுமானல் அந்த அதிகாரிக்கு எவ்வளவு திருப்தியை உண்டுபண்ணியிருக்கவேண்டும். இப்போப்பட்ட அயோக்கியத்தனம் சுதேசமித்திரன் பத்திராதிபர் செய்திருக்கையில் அவற்றையெல்லாம் மறந்துவிட்டு அவர்களுடன் நீங்களும் சேர்ந்துகொண்டு உத்தியோகவேட்டைக் கட்சியென்று உங்களை நீங்களே திட்டிக்கொள்ளுகிறீர்கள். உன்ன உத்தியோகத்தைப் பகர்ந்துகொடுக்கவே ஜஸ்டிஸ் கட்சிக்கேட்கிறதேயல்லாமல் காங்கிரசைப்போல் உத்தியோகத்தை உண்டுபண்ணும்படி அது சர்க்காரை கெஞ்சவில்லை. ஜனங்களை ஏமாற்றப் பிராமணரல்லாதாரைத்திட்டுவதும் உள்ளுக்குள்ளே யெல்லா அனுபோகத்தையும் கைப்பற்றிக்கொள்வதும யாருக்கும் தெரியாமல் ராத்திரியில் போய் வெள்ளைக்காரனைக் கெஞ்சுவதும் எவ்வளவு கொடுமையான காரியம்! இன்னும் அநேக பாப்பார பெரிய உத்தியோகஸ்தர்கள் தங்கள் பிள்ளைகளுக்கும் பந்துக்களுக்கும் எத்தனையோ வேலை வாங்கிக் கொடுத்திருக்குறார்களே. சர்க்கார் தயவுபெறாமல் எப்படி முடிந்தது? இப்பொழுது மந்திரி வீடுகாத்துப்பணமும் பதவியும் பிச்சையெடுக்கிறவர்கள் யார்? பிராமணப்பெண்ணைக்கலியாணம் செய்து கொண்டவரென்று பிரஷ்டபண்ணவில்லையே? தியாகராஜ செட்டியார் எந்தக்காலத்திலும் சர்க்கார் தயவை எதிர்பார்த்ததில்லை. ஞாயத்திற்குச் சண்டைபோட்டார்; மந்திரி பதவியைக்கூடத் தனக்கு வேண்டியதில்லையென்று தன் சகாக்களுக்குக் கொடுத்தார். இளவரசர் சென்னைக்கு வந்த சமயம் நகர சபையின் மூலம் வாசிக்கப்போகும் பத்திரத்திற்கு வேஷ்டிகட்டின வெள்ளையுடுபோடு வருவேனே ஒழிய சர்க்கார் நியமனப்பிரகாரம் உடுப்பணிந்து வரமாட்டேன் என்று ஆண்மைத்தனத்துடன் மறுத்துத் தன் தேசவழக்கப் பெருமையை நிலைநாட்டினார். காங்கிரசைத்திட்டுவதில்லை. அதில் நடக்கும் அக்கிரமங்களையும், அதற்கு ஏதுவாயிருப்பவர்களையும் பிராமணரல்லாதவர்களைக் கெடுக்க அதை உபயோகிப்பவர்களான அந்தக் காங்கிரசையே குற்றம் சொல்லுகிறோம். மது விலக்கு கடைமரியல்ஜெயிலுக்குச்சென்றது. இதைப்பற்றி எல்லாம் எழுதினது இத்தனையும் நடந்ததே ஒழிய சுதேசமித்திரன் பிராண்டி பாட்டிலை விட்டதா? ஏன் உங்கள் ஏமாளிக்குணத்தின் தன்மையும் காங்கிரசிலுள்ள அயோக்கியர்களுடைய உடந்தையுமே காரணமல்லவா? இந்த முதல்தரமான பிராண்டி எல்லார் வீட்டிலும் இருக்கவேண்டியது, எல்லாவியாதிகளுக்கும் இதுவே கைகண்ட மருந்து. என்றல்லவா பிரசுரித்திருக்கிறது. பிராண்டியின் மூலமல்லவா குடி பாவி குடும்பங்களை கெடப்போட்டது? கிராமாந்திரங்களில் பெருமைக்கும் வியாதிக்கும் பிராண்டி குடித்துப் பின் பணமொழிந்து சாராயம் கள் குடித்து செத்தவர்கள் எத்தனை? இத்தனைக்கும சுதேசமித்திரனல்லவா காரணம், சுதேசமித்திரன் உன்னையும் உன் கூட்டாளிகளையும் மதித்திருக்கிறதா; அது செய்யும் குற்றத்தைத திருத்தி முட்டாள்களான உங்களுக்கு உபதேசம்பண்ணப் பாப்பாரகள் ஆங்காங்கிருக்கிறார்கள். பதத்தாதிற்குப் பணம் வாங்கும் பாவிகளிருக்கிறார்கள். மீந்தவர்கள் ஞாயததைக் கண்டிப்பதில்லை, தப்பித்தலையெடுத்தவர்களை ஜஸ்டிஸ் கட்சியின் பேரைச் சொல்லித்தலையிலடித்துவிடலாம் என்கிற தைரியம் தவிர வேறு என்ன திருடன் வருகிறான் ஜாக்கிறதையாயிருங்கள் என்று சொல்லித்திருடுகிற பக்காத்திருடர்களாக இருக்கிறார்களே ஒழிய சத்தியம் ஞாயமுமென்னவிருக்கிறது.

திரு. சீனிவாச அய்யங்கார் எவ்வளவோ பாடுபட்டார் என்று நீயும் உன் கூட்டங்களிலும் நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள் அவர் பாடுபடாவிட்டால் காங்கிரஸ் பிரசிடெண்டு ஆவதும் பிராமணரல்லாதவர்கள் தலையில் கையை வைப்பதும் பீஸ் அதிகமேறுவதும் மடாதிபதிகளும் மருந்துகளும் கட்சிக்காரர்களாவதும் எப்படி? பிரகாசத்திற்கு பணம் கொடுத்ததாக திரு அய்யங்கார் சொல்லுகிறார். பரிதானமாகப் பணம் வாங்கவில்லை, கடனாக வாங்கினேன் என்கிறார். திரு. பிரகாசம். என் பணத்தை எல்லாரும் தின்கிறார்கள் என்று அய்யங்கார் சொல்லுகிறார். இது லஞ்சமென்னும் செக்ஷனுக்குள் வருமோ என்னமோ என்பதும் வக்கீல் அய்யங்காருக்குத்தான் தெரியும் எப்படியிருந்தாலும் இருவருக்கும் பணப்பழக்கம் இருந்ததென்பதும் அவர்களே மேடையேறிச்சொன்ன விஷயம். சுயராஜ்யக்கக்ஷி அதிபதிகள் என்னும் பாத்யதையும் காங்கிரஸ் மேதாவிகளென்னும் அதிகாரமும் முன்காட்டி வக்கீல் ஓதாவில் மருந்து மடாதிகளிடம் வாங்கின பணத்தைச்செலவிடுவதில் வேலை செய்யும் வக்கீலுக்கும் வேலையைவிட்ட வக்கீலுக்கும் வித்தியாசமுண்டாகலாம். இவை பின்னல் பொதுஜனங்கள் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயம் திரு. பிரகாசத்தைத்தம்போன்றவர்களே. பிராமணரல்லாதவர்களைக் கெடுக்கப்பணம் வாங்குவதாயிருந்தால் பணமே வாங்கியும் பணத்திற்கே திரியும் அயோக்கியர்கள் பிராமணரல்லாதவர்களைத்திட்ட அய்யங்காரிடம் எத்தனைபேர் இருக்கிறார்களோ நாமறியோம். இந்தக்கொடுமையைச் சகிக்காமலே திரு பிரகாசம் திரு அய்யங்காரின் அக்கிறமத்தை வெட்ட வெளியாகச் சொல்லப் புறப்பட்டு விட்டார். அதிகம் நீண்டுவிட்டது. குடியரசு கோபித்துக் கொள்ளும், படிக்கிறவர்களுக்கும் சலிப்புத்தோன்றும். மறுசமயம் பேசலாம்.

1000 கணக்கான வியாபாரிகள்; மாணவர்கள், குமஸ்தாக்கள் திருப்தியடைந்த
உலகப்பிரசித்தி பெற்ற
5 மாத இங்கிலீஷ் கோர்ஸ்

சொற்ப ஆங்கிலம் தெரியாமல் தொழிலில் பெருத்த நஷ்டமடையாதீர்கள் தபால் மூலம், வெகு சுலபமாய் தொழிலுக்கு யாதொரு இடையூறின்றி 1 மாத முதல் 5 மாதத்திற்குள் கற்றுக் கொடுக்கப்படுகிறது. நாகை ரேஞ்சு ஸ்கூல் இன்ஸ்பெக்டர் எழுதுகிறார்:— இங்கிலீஷ் அட்சரங்கள் கூட தெரியாதிருந்தவர்கள் இரண்டு வருஷத்தில் காலேஜ் மாணவர்களுக்கு மேலாக, ஆங்கிலத்தில் உபந்யாசிக்க கற்றுக்கொடுக்கப்பட்டிருந்தனர். சொற்ப கோர்ஸ்கள் தான் ஸ்டாக்கில் இருக்கின்றன. தங்கள் விலாசத்தை உடனே அனுப்பி பிராஸ் பெக்டயை இனமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

பிரின்சிபல் கேம்பிறட்ஜ் இன்ஸ்டிடூட் நாகூர்.

தமிழ் புக்கீப்பிங்.

விலை ரூபாய் 1.

கணக்கு வைக்கும் முறையை நன்கு போதிப்பது. ஒற்றைப் பதிவு, இரட்டைப் பதிவு, இரண்டு பாகங்களுமடங்கி இருக்கின்றன. அநேக வியாபார இரகசியங்களையு முடையது. வியாபாரிகள், மாணவர்கள், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் அவசியம்.

தே. ஆறுமுக செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

மதனகல்ப லேகியம்.

மலக்கட்டு, பசியின்மை, துரித்ஸ்கலிதம் சொப்பனஸ்கலிதம் முதலியவற்றைக் குணப்படுத்தி இந்திரியத்தைக் கட்டுவதில் சிறந்த ருசிகர சித்தரசாயனம். விலை சேர் 1க்கு ரூ. 2 வி. பி. வேறு

ஆனந்த நிலையம், திருச்செங்கோடு (S I.)

மகா ரசகெந்திமெழுகு.

தீராத வெண்குஷ்டம், கருங்குஷ்டம், திமிர் குஷ்டம், மேகம், ரணம், சூலை முதலிய கொடிய ரோகங்களை 1 மண்டலத்தில் பறக்கடிக்கிறது. 1 மண்டலமருந்து விலை ரூ! 4 வி. பி. வேறு கேட்லாக் இனம்.

ஆனந்த நிலையம், திருச்செங்கோடு S. I.

பார்ப்பனரல்லாதவர்க்கு.

நீங்களெல்லோரும் சூத்திரர்கள் என்று அநேக காலமாக பார்ப்பனர்களால் சொல்லப்பட்டு, விவகாரம் வரும்போது, இங்கிலீஷ் சட்டப் புஸ்தகத்திலும் பதியப்பட்டிருக்கிறது. உங்கள் வைதிக லௌகிக காரியங்களில் நீங்கள் சூத்திரர்கள் என்றே பாவித்து வந்திருக்கிறது. சூத்திரர்கள் என்ற பதத்தின் இழிவான அர்த்தம் தெரிந்த உங்களில் சிலர் ஆட்சேபித்து வருவதும் உங்களுக்குத் தெரியும்.

[illegible] சமீபத்தில் பார்ப்பனர்கள் ஒன்று கூடி [illegible] சபையில் நீங்கள் எல்லோரும் சூத்திரர்கள் என்றே தீர்மானமும் செய்து விட்டார்கள். இத்தீர்மானம் [illegible] நடக்கும், பார்ப்பனர்களும் திருப்தியாக சம்மதந்தான் என்பதற்கு உதாரணமாக [illegible] "சுதேசமித்திரன்" "ஹிந்து" முதலிய பார்ப்பனப் பத்திரிகைகள் கண்டிக்காமல் இருப்பதே போதுமான சாட்சியாகும்.

ஆராய்ச்சிக் குறைவினாலுண்டான குருட்டுத்தனமான மூடக்கொள்கைகளின் பலத்தால், கட்டுப்பட்டிருக்கும் உங்களுடைய சோம்பல் [illegible] நிறைந்த [illegible] இதுவரை போராடிவந்த தைரியமும் தலைதெறிக்கும் கேடாகிக் காப்போன்றும் கோழைகளான உங்களில் சிலர் அப்பார்ப்பனர்களுடன் சேர்ந்திருக்கும் மடமையும், உங்களின் இழிவை நிலைநிறுத்த காரணமாய் இருந்தது. நான்கு ஜாதியான பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்ற நான்கு பதத்திற்கும் அவர்களின் இந்து சாஸ்திரத்தில் அர்த்தமெழுதப்பட்டிருக்கிறது. அதில் சூத்திரன் என்ற பதத்தின் அர்த்தம் அநேகருக்குத் தெரியாது. உங்களுக்கு தெரிந்திருக்குமென்று பார்ப்பனர்களுக்குத் தெரிந்திருந்தால் இத்தனை தைரியமாக நீங்களெல்லாம் சூத்திரர்கள் என்று தீர்மானம் செய்திருக்கமாட்டார்கள்

சூத்திரன் என்னும் பதத்திற்கு கீழ்நிலை முடையவன், சக்கிலி, வேசி மகன், ஆசாரமில்லாதவன், தேஜஸில்லாதவன் ஒழுக்கமில்லாதவன் எவற்றொழில் செய்வோன், சக்தி இல்லாதவன், கண்டதைப் புசிப்போன் அடிமை என்று. இதுதான் இந்து சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த அர்த்தத்தையுடையவர்கள் நீங்களானால் எங்களுக்கு பாப்பாரிடம் இனி சண்டையேயில்லை. இந்த இழிவான பட்டத்தை ஏற்றுக்கொள்ள உங்களுக்கு இஷ்டமில்லை என்பது உண்மையானால் உங்களின் வைதிகச் சடங்குகளை பூர்வீக உங்கள் வழக்கத்திற்குத் திருப்பிக் கொண்டுவந்து பாப்பார புரோகிதர்களை நீக்கி விடுங்கள்.

"சுயமரியாதையே நமது பிறப்புரிமை சுயராஜ்யம் வயிற்றுச் சோற்று உரிமை."

வெடிகுண்டுகள்.

அ. ஆ. இ. ஈ.

காங்கிரஸில் சேரக்கூடாதென்ற கொள்கையுடைய சில "ஜஸ்டிஸ்" கட்சியார் தங்கள் அபிப்பிராயங்களை வெளிக்காட்ட ஏராளமான பிரதிநிதிகளைக் கொண்டுவர முயற்சிப்பதாகவும், அதையறிந்த ஸ்ரீ வரதராஜுலுவும் ஏராளமான பிரதிநிதிகளை அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார் ... ...

இப்பொழுது இருக்கும் நிலைமையில் [illegible] அவசியமென்று வரதராஜுலு நினைக்கிறார். அதற்காக வேண்டிய செய்கிறார் [illegible]"

ஃ ஃ ஃ

மனித வழக்கத்தின் பொதுவான ஒழுக்கத்தை காதல் பொருட்டு, ஒரு சில பெண்களை வெளியிலே [illegible] பெருமையடைந்து [illegible] ஸ்திரீக்களின் கற்பு காக்கப்படுகின்றது.

ஒரு விருப்பர்.

ஃ ஃ ஃ

விபசாரம் என்பது தாசிகளிடம் மட்டிலில்லை அது அவர்களின் தொழிலாக [illegible] இருக்கிறது உண்மை. இனி மற்ற உயர்ந்த ஜாதியார் அவர்களுடைய [illegible] விட்டு, அந்த ஜாதிக்குள்ள விபசாரத் தொழிலை பெரிதும் பங்கெடுத்துக் கொண்டார்கள்.

மீனாட்சி.

ஃ ஃ ஃ

விபசாரமே தாசிகளிடம் [illegible] இன்னும் இருந்து வருவது உண்மை. சமீபத்தில் நடைபெற்ற ஒரு தாசிகளின் மகாநாட்டிற்கு நான் சென்றிருந்தேன். அவர்கள் தங்களில் விபசாரத் தொழிலை உயர்ந்த ஜாதியார் கைப்பற்றிக்கொண்டதால் தாங்கள் இனி அதை விட்டுவிட்டு சகல பெண்களையும் விவாகம் செய்து கொடுக்க வேண்டுமென்று தீர்மானிக்கிறார்கள்.

தொண்டபாணி

ஃ ஃ ஃ

திருவாளர்கள் பி. டி. ராஜன் லா. ஏ. பி. பத்ரோ, மீர்சாபூர் ராஜா குண்டூர், எதிராஜுலு நாயுடு. சி. எஸ். ரத்தினசபாபதி முதலியார், எம். கிருஷ்ணன் நாயர், குமாரசாமி ரெட்டியார் எம். டி. சுப்பிரமணிய முதலியார், தணிகாசலம் செட்டியார், சிதம்பரநாத முதலியார், எ. ராமசாமி முதலியார் முதலிய 30 கனவான்களுக் கதிகமாக கூடிய கூட்டத்தில் கழக நிர்வாக பதவியை ஒப்புக்கொள்ள மறுத்த திரு நாயக்கரிடம் தாங்களும் அவ்விதம் செய்துவிடுவதாகச் சொன்னதின் பேரில் அப்பதவியை ஏற்றார்.

தெ. இ. சு. நி. கூ.

ஃ ஃ ஃ

நான் எடுத்துக்கொண்டுள்ள வேலைகளை நீங்கள் ஆதரிப்பதற்கு சந்தோஷமடைகிறேன். எனது சுயமரியாதை வேலைத்திட்டம் முடியும் காலத்தில சத்தியாக்கிரகம் செய்யவோ சட்டம் மீறவோ, ஜெயிலுக்குப் போகவோ நேரிடும். அக்காலத்தில் உங்கள் சங்கச்சட்ட திட்டங்களை மீறியவனாகவும் என்னை நீங்கள் கருதக்கூடும்.

ஈ. வெ. ரா.

தாங்கள் அவ்விதம் சொல்லக்கூடாது. நாங்கள் [illegible] பின்வாங்க மாட்டோம். ஆனால் அது பயனளிக்கக்கூடிய நிலைமையில் இருக்கவேண்டும். தெ. இ. ந. ச.

ஃ ஃ ஃ தி. கூ.

காங்கிரஸின் போக்கியதையை மிக உணர்ந்தவர் நாயக்கர் அவர். நமது தலைவர்களும் நமது எதிரிகளின் சூழ்ச்சியாலும், மற்ற காங்கிரஸ் பார்ப்பனரல்லாதார்கள் [illegible] இருந்த காலத்தில் நாம் [illegible] காலத்தில் [illegible] மறுபடியும் காலத்தில் நமது உண்மை தோழராக நாயக்கர் இருக்கின்றார். அவர் முறையை நாம் பின்பற்றி ஆரம்பித்தால் நமக்கு நாட்டில் வெற்றி உண்டாகிறது. மகாத்மா காந்தி அவர்களே கூடியது [illegible] உலக முழுவதும் ஒரே [illegible] ஒரு பெரும் அதிர்ச்சியை உண்டாக்கியது. [illegible] சுயராஜ்ய கட்சியின் போக்கை [illegible] சமயத்தையும், அதன் பலனையும் நாயக்கரே நமக்குக் காட்டினார். மகாத்மாவின் [illegible] ஒரு பெரிய திட்டத்தை [illegible] அனுஷ்டிக்க நாம் தயாராக இல்லை என்பது [illegible] ராக இல்லை என்பது [illegible]

என். கு.

ஃ ஃ ஃ

பல காரணங்களால் நாம் [illegible] கிடந்த காலத்தில் நமது எதிரிகளுடன் சேர்ந்து நம்மை கேலி செய்த ஒரு சிலரும், நம் [illegible] எடுக்கக் காரணமாக இருந்த நம்மில் சிலரும், இப்புது முறைகளை வேண்டுமென்கிறார்கள். இச்சமயம் நமது கட்சிக்குப் பட்டண ஆகியவாதிகளால் செய்யப்பட்ட மூன்றாவது தடவையின் சூழ்ச்சியாகும். முதல் முறை சென்னை மாகாணச் சங்கம், இரண்டாவது முறை காங்கிரஸ், மூன்றாவது முறை காங்கிரஸுடன் கலப்பு மட்டுமல்ல அதில் ஐக்கியமாக வேண்டும். இம் மூன்று முறைகளையும் ஒரே கூட்டந்தான் நடத்துகிறார்கள்.

வி. க.

ஃ ஃ ஃ

சமதர்ம உதயம் ஒன்றே பார்ப்பனரல்லாதவர்கட்கு நன்மையைப் பயக்கவல்லது. அத்திட்டத்தை நாயர் பெருமானும் தியாகராய பெருமானும், அதை நமக்களித்தார்கள்; புத்தருக்குப் பின் அவர் சிஷ்யர்களும், கிருஸ்துவுக்கு பின் அவர் சிஷ்யர்களும், தாஸருக்கு பின் அவர் சிஷ்யர்களும், காந்தி இருக்கும் பொழுதே அவர் சிஷ்யர்களும், தங்கள் குருமார்களின் அடிப்படைத் தத்துவத்தை புறக்கணித்து தங்கள் நுனிப்புல் மேயும் புத்தியைக் காட்டியதாலேயே மகத்தான நஷ்டம் நாட்டிற்கு ஏற்பட்டது. அதைப்போன்றே தியாகராயரின் காலத்தில் நம்மில் சிலர் நமது அதிர்ஷ்டத்தால் பிரிந்து நமக்கு நன்மை செய்ததாகவே எண்ணித் தீமையைச் செய்கையில், செய்து விட்டார்கள். அவர்களை இன்னமும் நாம் பின்பற்றுவது மிக ஆபத்தானதாகும். வெளிப்பகையை உட்பகை தாக்கி விடும்.

எஸ். மா.

அறிக்கை:— என் குருநாதர் ஹரித்துவாரம் மங்களபுரி பாவாஜி பெரிய யோகி மகான் நாலேர்து தலைமறையாய்க் கையாண்டு வந்து இம்முறையை நான் இருபது வருஷம் தொண்டு செய்து தெரிந்து கொண்டு சாதுக்கள் அகாடாவை விட்டு பழனிக்கு வந்து அனேக கொடிய ரோகஸ்தர்களுக்குக் கொடுத்து குணம் செய்ததற்குள்ள நற்சாட்சிகள் பலவுள. பக்தர், பிரபுக்கள் வேண்டுகோளுக்கிணங்கி குறைந்த விலைக்கு வெளியிடப்பட்டிருக்கின்றன. பலவித குஷ்ட ரோகங்களுக்கும் இன்னும் அனேகம் ரோகங்களுக்கும் ஏற்பட்ட அனுபானத்துடன் கொடுத்துக் கைகண்டது, பல சீதோஷ்ண ஸ்திதிக்கும் ஆண் பெண் இருபாலரும் எந்த வயதாகயிருந்தாலும் சாப்பிடச்சரியாய் அமைக்கப் பட்டது. அபார சக்தி வாய்ந்தது. வாந்தி முதலிய எவ்விதக்கெடுதலும் செய்யாதது.

தாம்பர பற்பம்.

தீரும் வியாதிகள்:— கருங்குஷ்டம், செங்குஷ்டம், வெண்குஷ்டம், சொரி குஷ்டம், பொரி குஷ்டம், விரிகுஷ்டம், எரி குஷ்டம் கபாலகுஷ்டம், குறை நோய், சில்லட்டைக்கடி, கடி விஷங்கள் 8-ம் நீராம்பல். பெருவயிறு, மகோதரம், நீர்கவசை, குன்மம், அண்டவாய்வு ஆனைக்கால், சூலை, திமிர், மதமதப்பு, உள்ளங்கை, உள்ளங்கால் எரிச்சல்கள், திரேகம் அழுகி தீர்நாற்ற முடையவர்கள், ஆணிப்புண்கள், குழிப்புண், கிராணி, கண்டமாலை, பவுத்திரம் இன்னும் அனேக கொடியரோகங்களைசீக்கிரத்தில 5, 10, 21-வேளைகளில் பாலாம்பிகை டிரேட் மார்க்கு குணப்படுத்தும்.

விலை விபரம்	முதல் நெ. தாம்பரபற்பம் அனுபான சூர்ணத்துடன்	21-நாள் விலை ரூ. 30	(தபால் பிரத்தி யோகம்)
	,, ,, ,, ,,	10-நாள் விலை ரூ. 15	
	2-ம் நெ. ,, ,, ,,	40-நாள் விலை ரூ. 40	

1. நற்சாட்சி:—பினங்கு பிரை[Prey] யிலிருக்கும் சி. வி. தோமஸ் என்பவர் மருந்து சாப்பிட்டு அனுபோகத்தைச் சொல்லுகிறதைக் கவனியுங்கள்:—

ஐயா, எனக்கு நீங்கள் அனுப்பியமுதல் நம்பர்தாம்பிர பற்பத்தை நான் 5நாள் சாப்பிட்டேன் கருமேக நீர் சம்பந்தமான சகல ரோகங்களும் நீங்கி சுகமாகி விட்டது. இனியும் பாக்கி மருந்து கைவசமிருக்கிறது. கஷ்டப் படுகிறவர்களை சௌக்கியப்படுத்தி ரக்ஷிக்கும் பொருட்டு கடவுள் உங்களை அவதார ரூபமாக ஏற்படுத்தியிருக்கிறார் என்பதற்கு நான் உறுதியாய் நம்பிக் கொள்ளுகிறேன். 16-2-27. சி. வி. தோமஸ்.

என் பேருக்கு தாங்களனுப்பிய தாம்பிர பஸ்பமானது மிகவும் அருமையானதும் அற்புதமானதுமான வேலை செய்திருக்கிறது: எப்படி யெனில்:— ஓர் எளிய ஸ்திரீக்கு காலில் முழங்காலுக்குக் கீழ் நுணுக்காயைப் போல் மேகவியாதி கால் பாதமிரண்டும் வீக்கம், இதற்காக நானும் சிலரும் சேர்ந்து பணம் வசூலித்து டை பஸ்பத்தின் வி. பி. யை வாங்குவதற்காக தயார் செய்து பார்சல் எங்களுக்குக் கிடைத்த அன்றைதினமே கொடுத்து இரண்டு தினம் நாலுவேளையில் காய்காயாக இருந்தது வத்தவும், பாதவீக்கமாக இருந்தது வடியவும், ஆரம்பித்து 5-நாள் 10-வேளை மருந்தில் முற்றிலும் உதிர்ந்து வீக்கமும் வாங்கி விட்டது. அநேகருக்கு மிகுந்த ஆச்சரியம் உண்டாகி விட்டது.

6-2-25 (Sd) T. A. பிள்ளை, மூர்ரோட்டு பெங்களூர் டவுன்.

விபரமான கேட்லாக்குக்கு எழுதுங்கள்.

வெளிநாட்டில் உள்ள நண்பர்கள் மருந்துக்கு ஆர்டர் செய்யும் போது முன் பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

ஸ்ரீமத் சற்குரு மகாதேவ ஸ்வாமிகள்,
சுதானந்த மெடிகல்ஹால், பழனி மதுரை ஜில்லா, தெனனிந்தியா.

நமது சோல் ஏஜண்ட் 86, { E. K. நாயுடு அவர்கள், டிரஸ்ஸர் டேலூக்கெடாங்கு ரோட்டு. கிளாங்—Klang F. M. S. }

கணித சோதிடம்

பரகித கணிதப்படி கணனஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆரூடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலாவது கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுக செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

மனமறி நூல்

ஒருவர் மனதில் நினைத்ததை இன்னதென்று தெளிவாய்க்கூறும் அருமையான ஆருட சாஸ்திரம். வடமொழி நூலை ஆதாரமாகவுடையது.

விலை ரூபாய் ஒன்று.

ஜோதி சாஸ்திரம

உபாத்தியாயரின்றி 30 நாளையில் ஜோதிஷம் கற்கலாம் எல்லா ஜாதகங்களுக்கும் பலன்கள் சொல்லக்கூடும். பஞ்சாங்கமின்றி எந்த ஜாதகமும் கணிக்கலாம். விலை ரூபாய் ஒன்று

மு. வடிவேல் செட்டி,
110, ஈஸ்பரன் தர்மராஜா கோவில் வீதி
புதுச்சேரி.

உங்களுக்கு ஓர் நற் சகுனம்

ஜோதிடம்

தர்ம நியாயமான 6 கேள்விகளுக்கு ரூபாய் ஒன்று பிரதி ஒவ்வொரு கேள்விகளுக்கு 0-4-0 ஒரு வருஷத்துக்கு பலன் ரூ 5-0-0 ; ஆயுள்வரை பலன் ரூ 50.

ஸ்ரீசிவ சுப்ரமண்ய சர்வ ஜயவசிகரணி கவசம் கைமேல் பலன். இராஜாக்களின் அபிமானம் புருஷனிடம் அன்பில்லாத மனைவி, மனைவியிடம் அன்பில்லாத புருஷவசியம் குடும்பங்களில் ஏற்படும் கலகங்களின் நிவர்த்தி பக்தி விசுவாசம் இக்கவசம் மிக்க கியாதி பெற்றது பக்தி விசுவாசம், தரித்திரம் முதலியது அணுகாது.

மானேஜர்,
ஸ்ரீசிவ சுப்பிரமணிய சோட கவச நிலயம்
திருத்தணி
சித்தூர் ஜில்லா

குறைந்த விலையில் மிகச் சிறந்த ஸில்க் !

அமெரிக்கன் ஸில்க்

துய்ய வெள்ளை, திக்கான பட்டு, தினசரி சலவை செய்யலாம். 5 முழ நீளம் x 40 இஞ்சி அகலமுள்ளது நீடித்த உழைப்பிற்கு உத்தரவாதம்.

கே. எஸ். முத்தையா கம்பெனி, தபாற் பெட்டி 99, சென்னை.

முன் விலை ரூ. 14. இப்பொழுது ரூ 7

22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல்—

கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி எந்த ஷேப் வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போலிருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச் சேர்த்து அனுப்பப்படும் 5 வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE.
George Town, Madras.

டிடக்டாவ் அல்லது

துப்பறியும் (ரகசியம்) கருவி.



இதன் உபயோகம் யாதெனில் உம்முடைய காதலியையும் அதோடு அவள் செய்யும் காரியங்களோடும் அவளுக்குத் தெரியாமலேயே நீர் கண்டுகொள்ளலாம். இதனால் எக்காலத்தில் உமக்கு முன்னும் பின்னும் நடக்கிற விஷயங்களை நீர் அறிந்து கொள்ளலாம். மேஜுட்டார் கண்டுபிடித்த கருவி இது பல கலர்களால் தயாரித்த 4 பிரஞ்சு போட்டோ படங்களுடன் இந்தக் கருவியின் விலை ரூ. 2—0—0

"மலாய் நாட்டிலுள்ளவர்களுக்கு கண்டிப்பாய் வி. பி. மூலம் அனுப்பமுடியாது. முன்பணமாவது போஸ்டல் ஆர்டராவது அவர்கள் அனுப்ப வேண்டும்".

பாரிஸ் எம்போரியம், ஜார்ஜ் டவுன், மதராஸ்

மின்சார மோதிரம். (எலக்டிரிக் பவருள்ளது)

இந்த மோதிரத்தை விரலில் போட்டமாத்திரத்தில் அதினின்று மின்சாரம் வெளியாகி அதுவிரல்வழியமாய் தேகமெங்கும் பரவி காச்சல், வாந்தி பேதி, இன்புளுயன்சா

நாடி நரம்பு தளர்ச்சிதலைவலி, மூலம், அன்னத்துவேஷம், அஜீர்ணம் மலச்சிக்குவாதம், சூலை,முதலிய தொந்துவியாதிகளைக்குணபடுத்தி தேகத்திலிருக்கும் கிருமிகளை எல்லாம் கொன்று தேகத்தையும் பலப்படுத்துகின்றது. இது அநேக லோகங்களால் செய்யப்பட்டு பார்வைக்கு வெகு சோத்தியாகவும், அலங்காரமாகவுமிருக்கும்

சிறியோர், பெரியோர் யாவரும் இந்த மோதிரத்தை உபயோகப்படுத்தலாம்.

மோதிரம் 1-க்கு ரூ. 1—8—0 12-க்குவிலை ரூ. 15—0—0

ஜாணி அன்கோ
நெ 10 தென்னூர் திருச்சிறுபள்ளி.(2)

கதர்ப் பத்திரிகைக்கு

வருட சந்தா ஒரு ரூபாய் மாத்திரம்

அல்லது

8000 கஜம் நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டு இலாகாவாகிய எங்களால் மாதம் இருமுறை கதரைப்பற்றி மாத்திரம் பிரசுரிக்கப்படும். எட்டுப் பக்கங்களடங்கிய

"குடி நூல்"

என்ற கதர்பத்திரிகையின் வருட சந்தாவை ஜனங்களின் உபயோகத்தை முன்னிட்டு ஒரு ரூபாய் அல்லது 8000 கஜம் நூல் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது சந்தாவை முன்னதாகவே மணியார்டர் அல்லது ஸ்டாம்பு மூலமாக அனுப்பவேண்டும். பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதில்லை.

அகில இந்தியாவிலும் விசேஷமாகத் தமிழ் நாட்டிலும் கதரியக்கத்தின் முன்னேற்றத்தைப்பற்றி எல்லாவிவரங்களும் கதரைப்பற்றிய கதர் பக்தர்களால் எழுதப்பட்ட வியாசம், கதை, கவிதை முதலியவைகளும் குடி நூலில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது கதரியக்கத்தில் பக்தியுள்ளவர்கள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து வேண்டிய உதவிபுரியுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்,
சர்க்கா சங்கம், ஈரோடு.

தாய்மார்கள்

கவனிக்கவேண்டியது.

சில தாய்மார்களுக்கு பலவித காரணங்களால் பால் சுருங்கி சிசுக்கள் தவிப்பதை நிவர்த்தி செய்து பால் வளரும்படி செய்ய நம்மால் ஒரு தேங்காய் ஜெபித்து வி. பி. செய்யப்பட்டுவருகிறது. 20 வருடத்து அனுபவம், எம்மதஸ்தாரும் வாங்கலாம், அனுபவிக்கும் விதம் தேங்காயுடன் அனுப்பிவைக்கப்படும் இதன் விலை தபால் செலவன்றி ரூ. 1—4—0 மாத்திரம்.

குறிப்பு:—சாத்துக்கருப்பு விஷயத்திற்கும் தேக சம்மந்தப்பட்ட வியாதிகளுக்கும், மந்திரத்தாலும மருந்தாலும் சிகித்சை செய்யப்படும்.

விலாசம்:— எ. எஸ். எ. மாந்திரிக டாக்டர்
இனாம்தார் வீடு,
சின்னகடைத்தெரு, தெப்பகுளம், திருச்சி.

திருப்பூர்
சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சிட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

பெட்ரோமாக்ஸ் லைட்.

லைட்கள், மாண்டில், டூம், தனித் தனி சாமான்யாவும் விலைநயமாய் கிடைக்கும். கியாட்லாக் இனாம்.

லன் கம்பெனி, தஞ்சாவூர்.

காகி நாடா சேலை

16 முழ நீளம் $2\frac{1}{2}$ முழ அகலம்

இது பார்வைக்கு மிகவும் சோத்தியாகவும் சுற்றிலும் பூக்கொடிகள்போட்டு மத்தியில் பெரிய பூக்கள் உள்ளது விலை ரூபாய் 5—0—0.

விலாசம்:— கனக அண்டு கம்பெனி
பார்க்டவுன், மதராஸ்.

மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916ஞு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சிர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும். தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினியரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.

இனாம்! இனாம்!! இனாம்!!!

பெண்களுக்கு

அழகான புடவை! உயர்ந்த மல்லில், பச்சை, புளூ, வயலெட், கருப்பு, செம்பு. ஸ்நப் சலர்கள் கெட்டிச்சாயம். பளப்பளப்பான வசீகரத்தோற்றமுள்ளது.

$2\frac{3}{4}$ அகலம் 18 முழம் புடவை .... ரூ. 4—4—0
5 முழம், அசல் பட்டு, குஞ்சம் கட்டின
வில்க் அங்க வஸ்திரம் ... ... ரூ 4—8—0
$2\frac{3}{4}$ அகலம் $7\frac{1}{2}$ முழம் அழுத்தமான கை
நெசவு வேஷ்டி ஜோடி ... ... ரூ. 4—6—0
"ஸ்பெஷல்" கேட்லாக் இனாம்!

The Madura Griental Trading Co.,
Laxmi Cloth Store, MADURA.

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.